ஜநவிநோதிநி.

இல. 11, 12.] { நவம்பர்மீ டிசேம்பர்மீ } 1885. [புஸ்த. XVI.

டையாஜினிஸ் என்னும் ஞானியும் சிகந்தரும்.

முற்காலத்திலே நமதுதேசத்தில் யோகாப்பியாசஞ்செய்து காய சித்திபெற்று ஞானசித்தியடைந்து பரகாயப்பிரவேசம் முதலிய அற்புதமான செயல்கள் செய்ய வல்லவர்களாய், சாதாரணமான மனிதர்களினும் மேலான பதவிபெற்றுத் தேவர்களுக்குச் சமான ராய், அஷ்டாதசசித்தர், நவசித்தர், நவகோடிசித்தர் என்று பலர் பலவிதமாய்க் கூறும்படி பாம்பாட்டிசித்தர், சத்தியநாதர், மதங்கர், கொங்கணர், கோரக்கர் முதலான யோகிகள் அநேகர் இவ்வுலகவின் பங்களைத் துறந்து தவநிலையிலேயே நின்று வெகுநாள் ஜீவித்திருந் தார்களெனக் கேள்வியுற்றிருக்கிறோமல்லவா?

இவ்விதமாகவே கிரீஸ்தேசத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன்னே மகா அலெக்சாந்தர் அல்லது சிகந்தர் என் னும் சக்கரவர்த்தி அரசுசெலுத்திவருநாளில் டையாஜினிஸ் என்கிற

யோகி ஒருவர் இருந்தார். அவர் இன்பம் துன்பம், விருப்பு வெறுப்பு முதலியவை ஒன்றும் இல்லாத ஒரு உத்தம புருஷன். அவர் முரட்டுத்துணிகளையும் கிழிந்துபோன கந்தைகளையும் கட்டிக்கொண்டு திரிகிறதேயன்றி அலங்காரமாய் அழகான உடைகளை உடுத்திக்கொள்வதாவது, இன்னும் வேறுவிதமாய்த் தன் உடம்பிற்குச் சுகத்தைத் தேடிக்கொள்வதாவது ஒன்றும் ஒருபோதுமில்லை. கிரீஷ்மகாலங்களில் அவர் வெயிலால் நெருப்புத்தணல்போலச் சுடுகிற மணலில் படுத்துப் புரளுவார்; மழைகாலம் குளிர்காலங்களில் பனிக்கட்டிகள் அடர்ந்தவிடங்களிலும் குளங்களிலும் வாசஞ்செய்வார். வெயில் மழை பனி குளிர் இவையொன்றுக்கும் அவர் அஞ்சுவதில்லை. எத்தன்மையான துன்பம் நேரிட்டாலும் அவற்றினின்றும் தன் உடலைக் காத்துக்கொள்ளச் சிறிதும் முயல்வதில்லை. அவர் வீடுகளில் வாசஞ்செய்வதை முற்றுந்துறந்து, மரத்தால் தொட்டியொன்று செய்துகொண்டு அதற்குள்ளேயே எப்பொழுதும் வாசஞ்செய்து வந்தார். தான் எங்கே சென்றாலும் அந்தத் தொட்டியையும் கூடவே தூக்கிக்கொண்டுபோவார். அவர் மரத்தொட்டியில் உட்கார்ந்திருக்கும் வகையையே முன் பக்கத்திலுள்ள படத்தில் காட்டியிருக்கிறது.

அவர் பகற்காலத்தில் வெளியேசென்றால் கூடவே கையில் ஒரு லாந்தரையும் எடுத்துக்கொண்டுபோவாராம். அது ஏன் அப்படியென்று யாராவது கேட்டால், அதற்கு அவர், யோக்கியனான உத்தமபுருஷன் எவனாவது ஒருவன் எங்கேயாயினும் அகப்படுவானா என்று தேடிப்பார்க்கும்பொருட்டு விளக்குக் கொளுத்திக்கொண்டு போகிறேன்; இதுவரையில் அப்படிப்பட்ட ஸத்புருஷன் ஒருவன் கூட எனக்கு அகப்படவில்லையென்று பதில் சொல்லிக்கொண்டு வந்ததாகத் தெரியவருகிறது.

இவ்வாறிருக்க உலகமெல்லாம் ஜயித்து அகண்ட பூமண்டலாதிபதியாயிருந்த மகா அலெக்சாந்தர் ஒரு சமயத்திலே இப்படிப்பட்ட யோகியைத் தரிசித்து அவர்க்குத் தேவையான பொருளைக் கொடுத்துப் பெருமைபெறவேண்டுமென்று ஆசைகொண்டு அவரிடஞ்சென்றான். ஆயினும் அந்த யோகி இவனைக் கண்ணெடுத்துப் பாராமல் தன் யோகநிஷ்டையிலேயே நிற்பதுகண்டு, அலெக்சாந்தர் அவரை 'ஐயா, டையாஜினிஸ்!' என்று கூவினான். அப்பொழுது அவ்விருவர்க்கும் அடியில்வருமாறு ஒரு சம்பாஷணை உண்டாயிற்று.

டையாஜினிஸ்: யாரங்கே கூவுகின்றது?

அலெக். நான்தான் அலெக்சாந்தர்; நீர் உமது தொட்டியை விட்டு நம்முடைய அரண்மனைக்கு ஒருபொழுதும் வருவதேயில்லையே; அதேன்?

டையா. ஏனென்று கேட்கிறீர்? உமது அரண்மனையிலிருந்து என் தொட்டிக்கு எவ்வளவுதூரமோ, அவ்வளவுதூரம் என் தொட்டியிலிருந்தும் உமது அரண்மனைக்கு இருப்பதனாலேதான்,

அலெக். ஆயின் நீர் அரசர்களுக்கு உபசாரம் செய்வதில்லையோ?

டையா. இல்லை.

அலெக். ஏன் செய்வதில்லை?

டையா. ஏனென்று கேட்பானேன்? இது உமக்குத் தெரியாதோ? அவர்கள் தேவர்களல்லாமையாலேதான்.

அலெக். அரசர்கள் தேவர்களல்லரென்று எப்படிச் சொல்லலாம்? அவர்கள் பூமிதேவதைகளல்லவா?

டையா. ஆம், நன்றாய்ச்சொன்னீர்; உமது வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். அவர்கள் பூமிதேவதைகள் தாம். (பூமியென்றால் மண், அதனாலாகிய தேகத்தையுடையவர்கள் என்பது அவர் கருத்து.)

அலெக். டையாஜினிசுக்கு விருப்பமானபொருள் ஏதேனும் அலெக்சாந்தரிடத்திலிருக்குமாயின், தெரிவித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

டையா. உம்மால் கொடுக்கக்கூடாதபொருளை நீர் என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாதிருந்தால் போதும்; கடவுள் கொடுத்த வெளிச்சத்தை மறைக்காமல் ஒதுங்கிநிற்பீராக.

அலெக். உமக்கு வேண்டியதென்ன?

டையா. உம்மிடத்திலிருப்பது ஒன்றும் எனக்கு வேண்டுவதில்லை.

அலெக். இவ்வுலகமெல்லாம் என் வசத்திலிருக்கின்றதே.

டையா. இருந்தாலென்ன? நான் இவ்வுலகம் முழுவதையும் வெறுத்திருக்கிறேனேயென்றான். அதுகேட்டு அரசன், நான் அலெக்சாந்தராயிராவிடின் டையாஜினிசாயிருக்க மிகவும் விரும்புவேன் என்றான்.

அப்பொழுது அவர் இவ்வுலகத்தின் அரசாட்சியைக் கேட்டாலும் கொடுக்க அலெக்சாந்தர் சித்தமாயிருந்தான். ஆயினும் டையாஜினிஸ் இவ்வுலகவின்பங்களையெல்லாம் திருணமாகமதித்து அவ்வரசன் கேட்ட கேள்விகளுக்கு இணங்க விடைகொடாமல் இருந்துவிட்டார். மனவுறுதியென்றால் அப்படியல்லவோ இருக்கவேண்டும். இவ்வாறு மகா யோகியான டையாஜினிஸ் தொண்ணூறு வருஷகாலம் இவ்வுலகில் ஜீவித்திருந்து அலெக்சாந்தர் இறந்த தினமே தேகவியோகமாயினாரென்கிறார்கள்.

தெய்வபக்திக்கு இரண்டாவது தேகசுத்தி.

ஒரு சம்பாஷணை.

சித்தசுத்தியும் தெய்வபக்தியும் பொறுமையுமாக வைத்தியம் செய்யும் பழனிஅம்மாள் என்பவள் எவர்கள் வீட்டுக்கும்போய் நோயாளிகளுக்குச் சிகிச்சையும், உபசாரமும், பண்ணுகிறது வழக்கம். அவளுடைய நற்குணத்தைக் கண்டறிந்த ஒரு பெருமாட்டி தன் வீட்டிற்கு வரவழைத்து அவளுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் இதனடியில் வருமாறு அவ்விருவரும் பேசலானார்கள்.

பெருமாட்டி: அம்மா நீங்கள் சிலவேளையில் அதிக நெருக்கமாயிருக்கும் எளியவர்கள் வீடுகளுக்கும் வைத்தியஞ்செய்யப் போக நேரிடுமே; உமக்கு எப்படி அவ்விடத்தில் சகிக்கிறது; அதனால் வியாதி உமக்குத் தொத்திக்கொள்ளாதாவென்று கேட்டாள்.

பழனியம்மாள்: ஆமாம் அம்மா, நான் தட்டாமல் அவ்வீடுகளுக்கும் போவதுண்டு. அவ்வீடுகளின் சீர்கெட்டநிலையை மற்றெங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையென்று எண்ணுகிறேன். துர்க்கந்தம் குடிகொண்டு அழுக்கடைந்த ஜலதாரையைக்கூட நன்றாய்ச் சுத்திசெய்யாத நிர்ப்பந்தமான வீடுகளில் சிலர் வாசஞ்செய்து சகித்து விநோதமாய் இருக்கிறார்களே; அவர்கள் பரிதாப ஸ்திதியை நினைக்க நினைக்க எனக்குத் திகிலுண்டாகின்றது. அதற்காகப் பிடிக்கும் சொற்பச் செலவைப் பெரிதென்று எண்ணாமல் கொஞ்சம் சவர்க்காரமும் சப்புத்தண்ணீரும் வாங்கி வீட்டில்வைத்து உபயோகித்துவருவீர்களானால் அப்புறம் என் சொல்லின் அருமை உங்களுக்குத் தெரியுமென்றும், லக்ஷ்மீவிலாசம் பொருந்தித் திரவியம் ஒன்றுக்கு ஒன்பது பங்கு மிஞ்சுமென்பதை அப்போது நீங்களே அறிவீர்களென்றும் நான் அவர்களுக்கு வெகுமுறை சொல்வதுண்டு. அது நிற்க.

சென்றவருடம் நடந்த சங்கதியொன்று இதற்குச் சரியான திருஷ்டாந்தம்; அதைச் சொல்லுகிறேன், சற்றே கவனமாய்க் கேளுங்கள். சிந்தாத்திரிபேட்டையிலிருக்கும் மாணிக்கம் என்பவள் ஒருநாள் என்னை வைத்தியம்பார்க்கத் தன் வீட்டுக்கு அழைப்பித்தாள், போயிருந்தேன். அவ்வீட்டில் குப்பையும், கூளமும், தூசியும் அரை அடி உயரம் மேலேபடிந்திருந்தன. பலகணிக் கதவுகளைத் திறக்காதபடி ஆணிஅடித்திருந்தது. அவ்வீட்டறை மிகவும் காற்றொடுக்கமானதாயிருந்தது; அதனால் பலகணியில் ஆணியடித்து இரண்டு

மூன்று வாரமாயிருக்குமென்று உத்தேசிக்கிறேன். அன்றியும் அக்குடும்பத்தில் கட்டி, சுரம், ஜலதோஷம், வயிற்றுவலி முதலியவற்றுள் ஏதேனும் ஒரு பிணியால் வருத்தப்படாதவர் ஒருவருமில்லையென்று அந்த மாணிக்கம் மனத்துயரத்தோடு என்னுடன் சொன்னாள். அதற்கு நான் சொன்னதாவது: வியாதிகள் பலவும் இவ்வீட்டிற் குடிகொண்டிருப்பதைப்பற்றி நாம் சற்றும் ஆச்சரியப்படவேண்டுவதில்லை. நீங்களிருக்கும் இவ்வறையில் சுவாசம்விட்டுப் பழுதற்ற காற்று நிறைந்திருக்கிறதேயொழியப் பழுதற்ற நல்ல காற்று கிஞ்சித்தேனுமில்லையே என்று சொன்னேன். அதுகேட்டு மாணிக்கம் எனக்கு இந்த நுட்பங்கள் எப்படி தெரியும், நான் கற்றறியாப் பேதையாயிற்றே என்று சொன்னாள். நல்லது, நீ கல்விகற்றவளல்லவென்றே தெரிகிறது. ஆனாலும் என்ன, நாம் உட்கொள்ளும் காற்று நமது ஜீவனுக்கு ஆதாரமென்று அறிவதற்குக்கூடக் கல்வி கற்றுத் தெளியவேண்டுமோ? காற்று அடைப்புள்ள ஒரு பெட்டிக்குள் உன்னைவிட்டுப் பூட்டினால் இறந்துபோவாயல்லவா என்று கேட்டேன். ஆம், மூச்சு அடைத்து இறந்துபோவேன் என்று மாணிக்கம் சொன்னாள். நல்லது மாணிக்கம், உடம்பாகிய இவ்வறையும் ஒரு பெட்டிபோலவே இருக்கிறதல்லவா? இதில் வசிப்பவர்களுக்குச் சுகம் உண்டாகத் திவ்வியமான சுத்த வாயு உலாவவேண்டும். நாம் சுவாசத்தை உள்ளுக்கு வாங்கும்பொழுதெல்லாம் காற்று உட்சென்று சுவாசாசயத்திற் சேர, அங்கிருந்து அசுத்தமாகிய விஷக்காற்று சுவாசம்விடும்பொழுது வெளிப்படும். ஆனதால், சுத்தவாயு தடையின்றி உட்சென்று உலாவவிடாமல் அறைவீட்டில் சந்து பொந்தின்றி அடைத்துவைத்தால், அவ்வறையிலிருப்பவர்கள் உள்ளே வாங்கி வெளியேவிட்ட அசுத்தமான விஷக்காற்றையே மீண்டு மீண்டும் உச்சுவாசநிச்சுவாசம் செய்வார்கள். இம்மாத்திரம் உனக்குத் தெரியாதா? இதையறியக் கல்வித்திறங்கூட வேண்டுமோ? சாதாரணமான புத்தியுள்ள எந்த மனிதருக்கும் இது தெரியுமே என்று சொன்னேன். அதற்கு மாணிக்கம், இப்போதுதான் எனக்கு மயக்கமற்று மனந்தெளியத் தெரிகிறது என்று உரைத்தாள்.

அதற்கு நான் சொன்னது, காற்று நமக்கு ஜீவாதாரமாகக் கடவுள் அருளிய சொத்து. இச்சொத்தை யாவரும் அனுபவிக்கவேண்டுமென்பதே அவருடைய அபிப்பிராயம். இல்லாவிடில் பகவான் காற்றைச் சிருஷ்டிக்க அவசியமில்லையே. இத்தகைமையுள்ள ஜீவசாதனமான காற்று இவ்வறைக்கு வரும்வழி பலகணிகள். அப்பலகணிக்கதவுகளை அடைத்துவிட்டால் அப்புறம் இங்கிருப்பவர்கள் சுகமாயிருக்க வேறு வகையில்லை. எவருக்கும் இன்றியமையாததாகிய இப்பொதுச் சொத்தை வம்புத்தனமாய் விலக்கியதனால் உங்களுக்கு நேரிட்ட சவுக்கியஹாநியை இப்போது நீ கண்ணாரக் கண்டாயே. நல்லது; காற்றானது தடையற நுழைந்து உலாவப் பல

கணிக்கதவைத் திறந்துவிட்டுப் பரீக்ஷைபார்ப்போமென்று சொன்னேன். பிறகு அடித்திருந்த ஆணிகளை இருவரும் வருத்தப்பட்டுக் கழற்றிக் கதவைத் திறந்தோம். திறந்தவுடனே விளாவில் காற்று நுழைந்து எங்கும் வீசியது. அதன் நலம் அந்தக்ஷணமே பிரத்தியக்ஷமாகத் தெரியவந்தது. அதுவரையில் அவ்வறைக்குள் சோர்ந்து மெலிந்து படுத்திருந்த பிள்ளைகள் மழைகாற்றடிக்கும்போது வாடி வதங்கிக் குவிந்து தரையில் படிந்திருக்கும் மலர்கள் மழைவிடவும் வாட்டமற்றுக் குவிந்த இதழ்களெல்லாம் விரிந்து நிமிர்வதுபோலக் களைதெளிந்து தலைநிமிர்ந்து பார்த்தார்கள். அவர்கள் முகத்தில் ஜீவகளை தோன்றிற்று. இவ்வாறு வெளிக்காற்றை உட்செலுத்திய பின் கொஞ்சம் சவர்க்காரமும் சப்புத்தண்ணீரும் கொண்டுவரச் சொன்னேன். மாணிக்கத்துக்கு அந்த வேலை வெகு தொல்லையாயிருந்தது. உடம்பில் அழுக்கும் ஊத்தைகளும் இருப்பதனால் பழுது என்னவென்றாள். நான் அவள் வார்த்தையைத் தடுத்து, மாணிக்கம், சரீரம் வெயர்க்கிறது என்று சொல்லுகிறார்களே, அது அறிவாயா என்றேன். ஆம், ஆம் என்றாள். உடம்பு வெயர்க்கிறது மாத்திரம் உனக்குத் தெரியும்; அவ்வேர்வை உடம்பிற்குள்ளிருந்து வெளிப்படும் அழுக்குநீரென்று அறியாய்போலும். உன் பிள்ளைகளுடைய உடம்புத்தோலின் ரோமத்துவாரங்களில் ஊத்தை சேர்ந்து அடைத்துக்கொள்ள விடுவாயானால் உடம்பினுள்ளிருக்கும் அசுத்தநீர் வெளிப்பட வழியின்றி உள்ளடங்கி, அங்கிருந்து எண்ணித் தொலையாத பிணிகளை உண்டாக்குமே, இதற்கு என்ன சொல்லுகிறாயென்றேன். அப்போது மாணிக்கம், நீர் சொல்வது மெய்யாகத்தானிருக்கவேண்டும். உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோவானேன். இதை ஒருபொழுதும் சிந்தனை செய்தறிந்ததில்லை என்றாள். அதற்கு நான், ஒன்று கேள் மாணிக்கம்; நான் சொல்லுவது மந்திரமல்ல, மாயமல்ல, இதன் உண்மையை நீயே பரீக்ஷித்தறியலாம். மனிதஜாதியானாலும் சரி, மிருகஜாதியானாலும் சரி, உடம்பில் சிறிதும் அழுக்குப்படியாதிருந்து சுத்தமான காற்று உலாவுமிடத்திற் சஞ்சரித்தால் அதனால் வரும் சுகம் ஒருபங்கு; உணவுமுதலியவற்றால் வரும் சுகம் ஒருபங்கு; சரீரசுத்தியும் காற்றுநலமும் உள்ளவர்களுக்கு மிதமான உண்டி போதும் என்றேன். மாணிக்கம், என் பிள்ளைகளுக்குச் சவர்க்காரம், சப்பு இவைகளைத் தேய்த்து ஸ்நாநம்பண்ணிவைத்தால் அவர்களுக்கு உண்டிசுருங்குமென்றா சொல்லுகிறீர் என்று கேட்டாள். அதற்கு நான், உறுதி சொல்வது கஷ்டம்; பிள்ளைகளுக்குப் பசிதீபனம் அதிகம், அது ஒன்று நிஜம். சரீரசுத்தி பிள்ளைகளை வளர்க்கும்; உடம்பிற்குப் பலம் உண்டாக்கும்; உல்லாசமும் களிப்பும் தரும். உண்டிச்செலவைச் சுருக்காவிடினும் வைத்தியர் கூலியையும் மருந்துச்செலவையும் சுருக்கிவைக்கும். நல்லது மாணிக்கம், நீ ஒரு மாசம்வரையில் பலகணி

களைத் திறந்துவிட்டுப் பிள்ளைகளுக்குப் பிரதிதினம் உடம்புகுளிப் பாட்ட உடன்படுவாயானால் அதற்குப் பிடிக்கும் செலவை நான் தருவேன்; அதனால் இந்தமாசம் முடிவில் உண்டாகும் நயநஷ்டத்தை நாம் இருவரும் அறிவோமென்று சொல்ல, அதற்கு மாணிக்கம் சம்மதித்து நான் சொன்னபடியே செய்தாள். அந்த மாசமுடிவில் அவள் பிள்ளைகளுக்கு அற்புதமான அழகும் முகக்களையும் அதிக வளர்ச்சியும் சரீரபுஷ்டியும் உண்டாயின. அவர்களைப் பார்க்கப் பார்க்கச் சப்புக்கும் தண்ணீருக்கும் இத்தனை சுகிர்தம் உண்டோவென்று மாணிக்கத்திற்கு அடங்காத ஆச்சரியம் உண்டாயிற்று. அவள் அதை எனக்கு அறிக்கைசெய்தாள். பின்பு இந்த நல்ல வழக்கத்தை அவள் எந்நாளும் கைவிடவில்லை. அவள் தானே ஒருவேளை மறந்துவிடினும் சுகித்துச் சவுக்கியத்தைக் கண்டபிள்ளைகள் சரீரசுத்திசெய்யத் தாமே முந்திக்கொள்ளுவார்களென்று உறுதியாக நம்பினாள். அன்றுதொடங்கி அந்தக் குடும்பத்தார் அனைவருக்கும் மேலுமேலும் சௌக்கியமும் கௌரவமும் உண்டாயின. வீட்டில் அவர்களுக்குக் குறைவற்ற சுகானுபவம் உண்டாயிற்று. "முதலாவது தெய்வபக்தி, இரண்டாவது தேகசுத்தி" என்னும் நீதிச்சொல் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இவ்வாக்கியம் மிக்க அர்த்த புஷ்டியுள்ளது. இதன் அர்த்த விஸ்தாரம் அநேகருக்குத் தெரியாது. தெய்வபக்தியும், தேகசுத்தியும் இடக்கை வலக்கைபோல் ஒன்றுக்கொன்று இளைக்காமல் இணைந்துசெல்லும் தகைமையுள்ளவைகள். சரீரம் புனிதமாயிருக்கும்பொழுது மனிதருக்குத் தர்மசிந்தை உண்டாவதும், சேற்றிற்புரளும் பன்றிகள்போல் ஊத்தைமயமாயிருக்கும்பொழுது தர்மசிந்தனை அவ்வளவு இல்லாதிருப்பதும் அனுபவசித்தமாய் அறிவோமே. ஆனாலும் புத்திபுகட்டி எளியவர்களைச் சுத்தியாயிருக்கச் செய்வது கஷ்டம். வெகு பெயருக்குத் தேகசுத்தி சாதகமாகவே ஆகாது.

பெருமாட்டி: ஆம், நீர் சொன்னதெல்லாம் சரியே; காற்றோட்டமில்லாமல் அழுக்கடைந்திருக்கும் எளியோர் வீடுகளுக்கு நீர் அச்சமின்றிப் போய்வருகிறீரே, வியாதி தொத்தாதா என்று கேட்டேனே; அதற்கு என்ன உத்தரம் சொன்னீர்?

பழனியம்மாள்: ஆம், தொத்துவியாதிக்கு அஞ்ச நிமித்தம் எப்பொழுதும் உண்டு. ஆனாலும் நோயாளிகளுக்குச் சிகிச்சைசெய்து நாள்கழிக்கும் என்போன்றவர்களை விசேஷமாய்க் கடவுள் சித்தம் இரங்கிக் காப்பாற்றுவாரென்று எனக்குள் உறுதியுண்டு. ஒருவேளை நான் மூடபக்தியால் இப்படி நினைத்தாலும் நினைக்கலாம்; ஆனாலும் நான் ஒன்றும் அறியேன். தெய்வத்திற்கே யாவும் மயக்கமறத் தெரியும். தெய்வம் காட்டியவழியில் குற்றேவல் செய்வது எனக்குத் திருப்தியான காரியம். நோயினால் வருந்தும் நோயா

ளிகளிடத்தில் அன்பில்லாத உயிர்வாழ்க்கை என்ன வாழ்க்கை அம்மா? அறிவினுலாவதொன்றுண்டோ; "பிறிதுநோய் தன் நோய் போல் போற்ருக்கடை" என்றும்,

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதில்லார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு."

என்றும் நாயனுர் நீதிவாக்கியம் கேட்டிருக்கிருேமே. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ருள்.

பெருமாட்டி: பிணியாளனை உபசரிக்கிறவர்களுக்குத் தெய்வ சகாயம் விசேஷமாய் உண்டென்று நீர் சொல்வது வாஸ்தவமென்றே நம்புகிறேன்; ஆனுலும் தொத்துவியாதியைத் தவிர்க்க மனிதருக்கு அமையும் உபாயம் யாதும் செய்யாமல் விடுவது புத்தியல்லவே.

பழனியம்மாள்: புத்தியல்ல, இதற்கும் ஐயம் உண்டா? எந்த அபாயத்தையும் அநாவசியகமாக வருவிக்காதிருக்க நான் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்கிறேன். ஆகாரம் உட்கொண்டு பசியாறியபின் நோயாளி படுத்திருக்கும் அறைக்குள் நான் போகிறதேயொழிய அதற்குமுன் போகிற வழக்கமேயில்லை. போனுலும் காற்றுவீசுகிற முகமாய்நின்று நோயாளியைப் பார்ப்பதேயல்லாமல் காற்றுக்கு எதிர்முகமாய் நின்றுபார்க்கிற வழக்கமில்லை. அதாவது, நோயாளி உடம்பிற்பட்ட காற்று என்னைத் தாவும் பக்கத்தில் நான் ஒருபோதும் நிற்பதில்லை; என் பக்கத்திலிருந்து காற்றுவீசும் வழியில் நிற்பேன். அன்றியும் நான் வைத்தியம்செய்யும் இடங்களெல்லாம் வேனிற்காலத்தில் பலகணிகளைத் திறந்துவைக்கும்படியாகவும், மாரிகாலத்தில் கதவைத்திறந்து முட்டுக்கொடுத்து நிறுத்திவைக்கும்படியாகவும், அறைக்குள்ளிருக்கும் கும்பிடுசட்டி நெருப்பு அணையாமல் வைத்திருக்கும்படியாகவும் சொல்வது எனது வழக்கம். இதற்கு ஆக்ஷேபம் சொல்வாரும் உண்டு; அதை நான் கேட்கிறதில்லை. எவர்களுக்கும் எக்காலத்தும் எவ்விடத்தும் சரீர சுத்தி மிகவும் ஆவசியகமென்று நான் வற்புறுத்திச் சொல்லிவருகிறேன். இதுதான் யாவரும் திட்டமாய் அனுசரிக்கவேண்டிய முக்கிய சாதனம். வீட்டின் தரையை அழுக்கற விளக்கி, கட்டிலில் ஏறியிருக்கும் தூசியைத் தட்டி, தலையணை, மெத்தை, பாய் இவைகளை உதறிச் சுத்திசெய்விக்க ஒருபொழுதும் பின்வாங்கலாகாது. கெட்ட நாற்றத்தைப் போக்கும் உவர்மண் சேர்ந்த சுண்ணும்புக்கும் வேறு சில காரமுள்ள பஸ்மங்களுக்கும் தொத்துவியாதியை நிவர்த்திக்கச் சக்தியுண்டு. சரீர சுத்திக்குத் தடையற்று உலாவும் நல்ல காற்றுக்குச் சமானமாகிய உத்தம சாதனம் வேறில்லை. நல்லது அம்மா, இனி நிற்க அவகாசமில்லை. உமக்கு என்னுல் ஆகவேண்டிய காரியம் மற்றென்றுமில்லாவிடில் விடைதரக் கேட்டுக்கொள்கிறேன். வைத்தியசாலையில் வெகுபேர் என்வரவை வழிபார்த்

எல்லோர்க்கும் நன்ருய் வெளியாயிற்று. அவருக்குப் பல வேலைகள் இருந்தனவென்ருலும் இதுவிஷயத்தில் அவர் தூங்காமுயற்சியுடையவராய் ஆராய்ச்சிசெய்துவந்தார். ஒவ்வொருநாளும் இருபது இருபது குழந்தைகளாய் ஒரு கும்பலாகச் சேர்த்து ஒவ்வொரு கும்பலாய் அளப்பார். அவர் அவ்வாறு காலை ஒருதரமும், காலைப்போசனமானவுடன் ஒருதரமும், பகல்போசனஞ்செய்தபின்பு ஒருதரமும், இராவில் படுக்கப்போகுமுன்னே ஒருதரமுமாக நான்குதரம் அளப்பார். இதுவுமன்றி அவர் பிரதிதினமும் ஒவ்வொரு குழந்தையையும் தனித்தனியேயும் அளந்துவந்தார். மனிதர்கள் வருஷமுழுமையிலும் வளர்ந்துகொண்டு வருகிருர்களென்று உலகத்தவர்கள் சாதாரணமாய்க் கொண்டிருந்த எண்ணம் இந்த ஆராய்ச்சியினுல் சரியல்லவென்று வெளியாயிற்று. ஒருவருஷத்தில் குறித்த மூன்று காலங்கள் வளர்ச்சிக்கேற்றவையென்று கண்டறியப்பட்டன. ஆகஸ்டுமாதமுதல் டிசம்பர்மாதவரையிலும் உடம்பு பருக்கும்; டிசம்பர்மாதமுதல் ஏப்பிரல்மாதம் மத்திவரையிலும் பருப்பதும் உயர்வதும் ஆகிய இவ்விரண்டும் ஒரே சீரிலிருக்கும்; அதன்பின்பு இவ்விரண்டு குணமும் ஆகஸ்டுமாதம் மத்திவரையிலும் படிப்படியாய்க் குறைந்துகொண்டேவரும். விருக்ஷவகைகளின் வளர்ச்சியும் பருமனும் எவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறே மனிதர்களின் வளர்ச்சியையும் பருமனையும் இவ்வளவென்று அளவிட்டுப்பார்க்கலாம்.

நோயாளிகளுக்கு இதம்பண்ணுதல்.

எப்படிப்பட்ட நோய்வந்திருந்தாலும் மனவெழுச்சியும் தைரியமுமிருந்தால் பாதிவருத்தம் நீங்கும். ஆதலின் நோயாளிகளை ஒருவாறு வருத்தமின்றிச் சுகமாயிருக்கும்படி செய்யாதிருப்பதேன்? சுகமும் நோயும் ஒன்றிற்கொன்று அவ்வள்வு நேர் விரோதமுள்ளனவல்ல. எவ்வளவு வருத்தமான காலத்தையும் விளையாட்டுப்போலக் கழித்துவிடலாம். அருகேயுள்ளவர்கள் நோயாளிகளை எவ்வளவுக்கெவ்வளவு உபசரித்துத் தேற்றுவார்களோ அவ்வளவுக்கவ்வளவு நோயின் வருத்தம் தீர்ந்ததுபோலாகிவிடும். வெகுகாலமாகப் பிள்ளையில்லாமலிருந்தவளுக்குப் பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளையைக் கண்டவுடனே அவளுக்குத் தான்பட்ட வருத்தமெல்லாம் நீங்கி ஆனந்தமுண்டாவதுபோலவே, அன்புற்றவர்கள் சொல்லும் இனிய மொழிகளைக் கேட்பதனுல் நோயாளிகளின் வருத்தமும் ஒருவாறு தணியும்.

வேண்டியவர்கள் நோயாளியாயிருப்பவர்களைப் போய்ப் பார்ப்ப

தினாலேயே நோய் சற்றே குறைவுபட்டதுபோலாகும். பல்வலி முதலியவற்றால் உபத்திரவப்படுகிறவர்களைக் கண்டு, அப்பா பல்வலி என்ன, எளிதில் பொறுக்கத்தக்கதோ; அந்தச் சங்கடத்தை நான் நேரில்பட்டனுபவித்திருக்கிறேன்; அதை நினைக்கையிலேதானே எனக்கு நடுக்கமெடுக்கிறது என்று ஒருபோதும் சொல்லக்கூடாது; சொன்னால் அதைக் கேட்டவுடன் நோயாளிகளுக்கு இன்னும் வலி அதிகமாகத் தோற்றும். கைகால் ஒடிந்தவர்களைக்கண்டு இப்படிச் சொல்வதும் தீதேயாம்.

நோயாளிகள்படும் வருத்தத்தை அவர்கள் மறக்கும்படி இனிமையாய் அன்போடு பேசி வேடிக்கையாகக் காலங்கழியும்படி செய்தால்தான் கொஞ்சம் சுகமாயிருக்கும்; அவர்களை வீணாய் அதைரியப்படுத்துவதினாலே தீமையேயன்றி வேறில்லை. நோயாளிகளுக்கு எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினால் பிரியமாயிருக்குமோ அதைப் பற்றியே அவர்களோடு அதிகமாகப் பேசவேண்டும். அவர்களோடு பேசும்போது உள்ளும் புறமுமொன்றாய் அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு ஆதரவாக வார்த்தைசொல்லவேண்டும்; மேலுக்குமாத்திரம் இச்சகமாய்ப் பேசுவதில் சிறிதும் பயனில்லை. நோய்கொண்டவர்களிருக்குமிடத்திற்கு அவர்களுக்கு வேண்டாதவர்களை ஒருபொழுதும் போகவிடலாகாது. எவ்வளவுக்கெவ்வளவு அன்புள்ள இஷ்டர்கள் நோயாளிகளின் சமீபத்திலே அதிகமாயிருப்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு நோய் எளிதில் குறைவுபடும். நோய்கொண்டவர்களின் வருத்தம் நீங்கும்படியாக யாதேனும் இன்பமான கதை, புராணங்கள் முதலியவற்றைப் படிக்கவேண்டுமானால் வெகு அமரிக்கையோடு நிதானமாய் எளிதில் பொருள்விளங்கும்படியாக ஆற அமரப் படித்தலே நன்று. மிகவும் கடினமான பொருளுள்ளனவற்றை நோயாளிகளிடம் படிப்பது நன்றல்ல. சிறுவர்க்கும் எளிதில் பொருள் விளங்கும்படியானவற்றைப் படித்தால்மட்டுமே நோய்கொண்டவர்களுக்குக் குணமுண்டாகும். வியாதியில் வருந்தும்போது புத்திக்கு அதிகமான கிலேசத்தை ஒருபொழுதும் உண்டாக்கலாகாது. படிக்கும் விஷயங்களெல்லாம் மிகவும் சுருக்கமாக இருத்தல்வேண்டுமேயல்லாது வெகுநாளில் படித்து முடிக்கும்படியான நெடியகதையாயிருக்கலாகாது. படிக்கும்போது எங்கேயாவது கடினமான சந்தர்ப்பங்கள் ஒருவேளை நேர்ந்தாலும் அவ்விடத்துக்குரிய எளிய பதங்களைச் சேர்த்துப் படிப்பதே நன்று. சொன்னதையே பன்னிப்பன்னிச் சொல்லுதலைக் கேட்பதும் பார்ப்பதும் வெறுப்பாயிருக்குமாதலால் அப்படிப்பட்ட விஷயங்களைப் படியாமல் உபாயமாய் சொல்லிவிட்டு, கதையை இடையே விட்டுவிடாமல் ஏற்றவண்ணமாய் ஓட்டிப்படிக்கவேண்டும். இப்படிக்கெல்லாம் செய்வதற்குப் படிப்பவர்கள் முன்பே கதையை நன்றாய்க் கவனித்திருப்பது நலம். அப்படிப் படித்திருந்

தாலன்றி ஒருவன் விட்டவிடமும் தொட்டவிடமும் விரோதிக்காமல் கதையைப் பொருத்தமாகப் படிப்பது சாத்தியப்படாது.

புராணம் படிப்பதுபோல படபடவென்று குதிரை ஓட்டமாய்ப் படித்தால் நோயாளிகளுக்கு இன்பமாயிராது. படிக்கும்போது நிறுத்துமிடங்களில் நன்றாய் நிறுத்தி அவரவர்களுக்குக் கேட்கக் கேட்க இனிமையாயிருக்குமாறு சிறுகச்சிறுகத் தெரியும்படி தெளிவாய்ப் படிக்கவேண்டும். கதையைப் படிக்கும்போது அதுவிஷயமான சங்கதிகளைப்பற்றி இடை இடையே சிறிதுநேரம் வார்த்தைசொல்லுவதில் இன்னும் அதிக குணமுண்டு. நோய்கொண்டார்க்கு அந்நோய் நீங்கும்பொருட்டு இவ்வாறு வேடிக்கையாகக் காலங்கழியும்படி செய்வதில் எத்தனையோ விதமுண்டு.

நோயாளிகளைச் சற்றுத் தனியேயிருக்கும்படி செய்வதும் நன்று. அப்படி அவர்கள் ஏகாந்தமாயிருக்கும் வேளைகளில் அவர்களிருக்கும் இடங்களில் கண்ணுக்கினிய காட்சிகளிருந்தால் நலம். நன்றாய்ப் புஷ்பிக்கும் பூஞ்செடிகளிருந்தால் அவற்றால் அவர்களுக்கு எத்தனையோ ஆநந்தமாயிருக்கும். கண்ணுக்கு அசங்கியமானதொன்றையும் அவர்களிருக்குமிடங்களில் வைத்திருக்கவொண்ணாது.

நோய்கொண்டிருக்குங்காலத்தில் நோயாளிகள் தங்கள் வீட்டாருக்குப் புத்திமதி சொல்லுவதிலும், கிருககிருத்தியங்களைப்பற்றிப் பேசுவதிலும், வீட்டை நன்றாய் வைத்திருப்பதிலும், குழந்தைகளைப் படிப்பிப்பதிலும் நாட்டமுள்ளவர்களாயிருந்தால் அவர்கள் கொண்டிருக்கும் நோய் அத்தனையாகத் தோற்றாது. பலவாறு சொல்லியென்ன? நோய்கொண்டவர்களிடத்தில் மற்றவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அன்பு பாராட்டுவார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் கொண்டநோய் நீங்கி எளிதில் சவுக்கியம் உண்டாகும்.

தபால் சாவடியின் முற்கால தற்கால நிலைமை.

இப்பொழுது நாநாதேசத்துப்பிரஜைகளும் தம்முடைய பந்துமித்திராதிகள் எவ்வளவு தூரதேசத்திலிருந்தாலும் அவர்களுக்குத் தமது யோகக்ஷேம சமாசாரங்களை எவ்விதமான வருத்தமும் இல்லாமல் வெகு சுலபமாய்ப் பத்திரிகைகள் எழுதித் தெரிவித்துக் கொள்ளவும், புஸ்தகங்களும் மற்றும் பலவகைச் சாமான்களும் பணம் நகைநட்டுமுதலியனவும் சிறிதும் அபாயமில்லாமல் வேண்டியவிடங்களுக்கு அனுப்பவும் மிகவும் அனுகூலமான சிறந்த தபால் ஏற்பாடு ஏற்படுத்திச் சொற்பகாலந்தானாயிற்று. அதற்குமுன்னே ஜனங்கள் ஒருவர்க்கொருவர் க்ஷேமஸமாசாரங்களைத் தெரிவித்துக் கொள்ளச் சுலபமாய்ச் சாத்தியப்படாமல் எவ்வளவோ வருத்தப்

பட்டுக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்குச் சங்கதி தெரிவிக்கவேண்டுமென்றால், எவனாவது ஒரு ஆள்வசம் ஓலையெழுதிக்கொடுத் தனுப்பவேண்டுமேயொழிய வேறுவழி கிடையாது. ஒரு ஆளை அனுப்புகிறதென்றாலென்ன; எளிதில் முடிகிற காரியமா? வேலையைவிட்டு ஒழிந்திருக்கிற ஆள் திடீரென்று வேண்டும்போது கிடைப்பது எக்காலத்திலும் கஷ்டசாத்தியமே. அப்படியின்றி எவனாவது ஒருவனைத் தேடிப்பிடித்தாலும் அவன் தான்செய்துகொண்டிருக்கும் வேலையைவிட்டு வரவேண்டியிருப்பதால் அந்த நஷ்டத்திற்கு இரட்டிப்புக்கூலி கேட்பான். கூலிகொடுப்பதுமாத்திரமே போதாது; படியரிசியுங்கொடுத்துச் சாப்பாடும்போடவேண்டும்.

இவ்வளவு உபசாரஞ்செய்து அனுப்பினாலும் நாம் நினைக்கின்றபடி செய்திசீக்கிரம்போய்ச் சேருகிறதென்பதில்லை. ஆள் கடிதமெடுத்துக்கொண்டுபோகத் தாமதப்படுகிறதென்ப திருக்கட்டும்; வழியில் நேரிடும் பல இடையூறுகளால் வெகு துன்பங்கள் சம்பவிப்பதுண்டு. மார்க்கத்தில் திருடர்களாலும் துஷ்டமிருகங்களாலும் அபாயம் நேராதிருக்கும்படி வழிப்பிரயாணம்போகின்றவன் எப்பொழுதும் ஆயுதமும்கையுமாகவே செல்லவேண்டும். சில சமயங்களில் அவைகளுக்குத் தப்பித்துக்கொண்டு செல்வது வெகு கடினமாகிவிடும். அடுத்த ஊருக்குப்போகவேண்டுமென்றாலும் முற்காலத்தில் திருடர்களுடைய பயம் மிகவும் அதிகம். ஆளையடித்தால் அரைப்பணமாவது கிடைக்காதாவென்று வழிப்போக்கர்களை மடக்கியடிக்கக் கள்ளர்கள் எங்கும் காத்திருப்பார்கள். இதற்காகவே "துணையோடல்லது நெடுவழிபோகேல்" எனவுங்கூறியிருக்கின்றனர். ஆனதுபற்றி ஊரைவிட்டு வெளியே புறப்பட்டால் பத்துப்பேர் எட்டுப்பேர் ஒன்றாய்க் கூடிப் போகவேண்டியதாயிருந்தது. இவ்வாறு புறப்பட்டுப்போனாலும் இடையே ஆறுகளிருக்குமிடமாயிருந்தால், அவை அக்கரைக்கு இக்கரை ஆள்போகக்கூடாமல் பெருக்கெடுத்து வெகுநாள் வரையில் வடியாது வெள்ளமோடிக்கொண்டிருக்கும். அதனால் ஓலைகொண்டுபோன ஆள் ஆறுவடியுமளவும் காத்திருந்துபோய்ச் செய்தி தெரியப்படுத்தும்படியாகும். இவ்வாறு 'அதி ஆபத்து என்றால் ஆடிதிதிக்கு வந்தான்' என்பதுபோல, நாளை அவசரமென்று செய்திசொல்லியனுப்பினால் நாலாறுமாதங்கழித்துக்கூட மனிதர்களுக்குச் சமாசாரம்போய்ச் சேருவது கஷ்டமாயிருக்கும். தூரதேசத்துக்குச் செய்திகொண்டுபோகிறவன் தெய்வகதியால் நடுவழியே பல பிணிகளில் அகப்பட்டுக்கொண்டு துன்பப்படுவதுமுண்டு; ஒருவேளை அவற்றால் பிராணபாயம் நேர்ந்தாலும் நேரிடும். ஒருகால் தெய்வம் அப்படி சங்கற்பிக்குமாயின் அவனுடைய செய்தி பிறகு அவன் பந்துகளுக்கு ஒருபோதும் தெரிவதேயில்லை. இவ்வாறான பல இடையூறுகளுக்கும் தப்பி ஒருவன் க்ஷேமசமாசாரம் கொண்டுபோய்ச் சேர்ப்பானா

னுல், அவர்கள் அவனைக் காணுதுகண்டதுபோலக் கொண்டாடி அவனுக்குப் பல உபசாரங்கள் செய்து படியும் கொடுத்துப் பிரதியுத்தரம் சொல்லியனுப்புவார்கள். இவ்வாறு ஒருவர்க்கொருவர் செய்தி தெரிவித்துக்கொண்டாலுண்டு; அல்லது யாராவது வழிப்போக்கர்கள் தற்செயலாய் அவ்விடங்களிலிருந்து வந்து தங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னுல் அதைக்கேட்டுக் களித்திருக்கவேண்டும். முற்காலத்தில் ஒருவர்க்கொருவர் சுபாசுப சமாசாரங்கள் தெரிவது இத்தன்மையான நிலையிலிருந்தது. பூர்வகாலத்திலே நமது ராஜாக்கள் தபால்குதிரை, தபால் ஒட்டை, தபால் வண்டி முதலியவைகளைவைத்து வழங்கினுர்களெனக் கேள்வியுற்றிருக்கிறேமாயினும், அவை கேவலம் ராஜாங்கத்துக்கட்டளை முதலியவற்றைக் கொண்டுபோவதற்குமாத்திரம் உபயோகிக்கப்பட்டுவந்தவையாகத் தெரியவருகின்றதேயொழிய, குடிகளுடைய சமாசாரக் கடிதங்களையும் கொண்டுபோவதற்கு இடங்கொடுத்திருந்தவையாகத் தெரியவில்லை.

பின்பு ஐரோப்பாமுதலிய விடங்களிலே சில தேசங்களில் கொஞ்சங்கொஞ்சமாய் நாகரீகம் ஏறஏற, துரைத்தனத்தாரே இவ்விதமானவருத்தங்களை யுணர்ந்து, பிரஜைகள் பலரும் அனுப்புகிற சமாசாரக் கடிதங்களையெல்லாம் பொதுவாய் ஒவ்வோரிடத்திற்கும் ஒவ்வொரு மனிதனை நியமித்து அவர்கள்மூலமாய் அவ்வவ்விடங்களுக்குக் கொண்டு செலுத்தும்படியான ஏற்பாடு செய்யலாயிற்று. இக்காலத்தில் வழங்கிவருகின்ற வெகு சகாயமான தபால் ஏற்பாட்டுக்கு ஆரம்பம் இதுதான். ஆயின் அக்காலத்தில் தபால்மூலமாய் வரும் பத்திரிகைகளுக்குச் செலுத்தவேண்டியகூலி மிகவும் அதிகமாயிருந்ததுபற்றி அந்த ஏற்பாடு ஏழைகளுக்கு அத்தனையாய் உபயோகப்படாமல் போய்விட்டது. கொஞ்சம் சாமர்த்தியம் உள்ளவர்களான ஏழை ஜனங்கள் தபால் உத்தியோகஸ்தர்களை மோசஞ்செய்து கட்டணஞ்செலுத்தாமலே தந்திரமாய் ஒருவர்க்கொருவர் சமாசாரங்களைத் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு நடக்கும் சூதை ஒருநாள் பார்த்திருந்த ஒரு புத்திசாலியின் மனதில் இவ்விஷயம் உறுத்தவே, அவர் அதற்குக் காரண மின்னதென்பதை நன்கு ஆய்ந்து உணர்ந்து, ஸகலமான ஜனங்களுக்கும் அனுகூலமாகும்படி அவ்வேற்பாட்டைப் புதுப்பிப்பதற்குவேண்டிய வழிகளைத் தேடலானுர். இதைப்பற்றிய விவரங்களைமுன் ஒரு சஞ்சிகையிற் கூறியிருக்கிறேம்.

தபால் வியாபாரம் சீர்ப்படுகிற விஷயத்தில் ரோலாந்து ஹில்லைப்போலப் பாடுபட்டவர் எக்காலத்திலும் எவருமில்லை. அவர் பென்னி போஸ்டேஜ் என்னும் சகாயமான தபால் கட்டண ஏற்பாட்டை ஸ்தாபித்ததனுல் புஸ்தக வியாபாரங்கள் செய்வதற்கு மிகவும் அனுகூலமுண்டாயிற்று. இதற்கு ஒரு நிதர்சனம் பாருங்கள்: இந்த ஏற்பாடு வழக்கத்திற்கு வாராதிருந்தால் கிறிஸ்து வேதபுத்தகங்கள் பிர

சுரம்செய்வது மிகவும் கஷ்டஸாத்தியமாகி விட்டிருக்கும்; ஏனெனில் அதைப் பிரசுரம் செய்பவர்களுக்குப் பழையகாலத்து ஏற்பாட்டின்படி சோதனபத்திரிகைகள் சோதிப்பவரிடம்போய் வருவதற்கே 1500 பவுன் செலவு செய்யவேண்டியதாயிருக்கும்.

புதியதபால் ஏற்பாடு துவக்கமாகி லந்தன்மாநகரம் பல தபால் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதும், வேண்டிய இடங்களுக்கு அவரவர் தபால்வழியாய்ப் பணம் அனுப்புவதற்குரிய ஏற்பாட்டை மேன்மேலும் அதிகமாய்ப் பரவச்செய்ததும், தபால் ஆபீசு தனரக்ஷகசாலைகள் ஸ்தாபித்ததும், வகை தொகை இல்லாமல் ஆயிரக்கணக்காய்க் கும்பலாகவந்து சேருகின்ற தபால்கடிதங்களைக் கடல்மார்க்கமாய் அனுப்பவேண்டியவை இவை, இருப்புப்பாதை வண்டிவழியாய் அனுப்பவேண்டியவை இவையெனத் தனித்தனி பிரித்தெடுத்து, அந்தந்தவிடங்களுக்கு அனுப்பவேண்டிய கடிதங்களை அங்கங்கே வண்டிநிற்கின்ற சொற்பநேரத்தில் கொடுத்துவிடும்படி கட்டுகளாகக் கட்டுகின்ற முறை அமைந்ததுமாகிய இவை மிகவும் வியக்கத்தக்கவையாயிருக்கின்றன.

புஸ்தகங்களைத் தபால்மூலமாய் அனுப்பும்படியான ஏற்பாடு இங்கிலாந்திலே 1848-ௗ ஸ்தாபிக்கப்பட்டு தபால் வியாபாரம் அனைத்திற்கும் ஒரு பேருதவியாக விளங்குகின்றது. நாட்டுக்கு மிகவும் நன்மை விளைவிக்கின்றவையான இவ்வகை ஏற்பாடுகள் பலவும் ரோலாந்துஹில் என்னும் உத்தம புருஷனுடைய சாமர்த்தியத்தினாலும் விடாமுயற்சியாலுமே எங்கும் வழங்கலாயின. இந்தச் சகாயமான தபால் ஏற்பாடு முதலில் இங்கிலாந்திலே பரவ, அங்கிலேய துரைத்தனத்தாருடைய ஆட்சியின்கீழ் அமைந்தபிறகு இத்தேசத்திலும் அது கொஞ்சங்கொஞ்சமாய்ப் பரவலாயிற்று.

இத்தேசத்துச் சமாசாரக் கடிதங்களுக்கெல்லாம் அததற்குத் தகுந்த கட்டணமேற்படுத்தி அங்கங்கே அவற்றைக் கொண்டுசெலுத்துகிற பாத்தியதையை 1837-ம் வருஷம் துரைத்தனத்தாரே முற்றும் ஏற்றுக்கொண்டனர். ஆயின் தபால் வியாபாரம் அனைத்தையும் தலைமையாயிருந்து பரிபாலிக்கத்தக்க மேல் அதிகாரியொருவர் அதற்கு ஏற்படாமல் ஆதியில் இவ்வேற்பாடுகள் அதிகமாய்த் திருத்தமில்லாதனவாயிருந்தன. அந்தந்த ராஜதானியின் தபால்வியாபாரங்களுக்கு அதிபதியாயிருந்தவரே எல்லா வியாபாரங்களையும் விசாரணைசெய்யும்படியாயிருந்தது. நாடுகளின் அந்தந்த ஜில்லாவிலுள்ள சமாசாரக்கடிதப் போக்குவரவு வியாபாரமெல்லாம் அந்தந்த ஜில்லா கலெக்டருடைய விசாரணையின்கீழ் இருந்தன. இராஜதானியான நகரத்துக்கும் வெளியிலுள்ள பிரதானமான சில நகரங்களுக்கும் காலாள்கள் அஞ்சல்மேல் தபால்கடிதங்களை எடுத்துக்கொண்டு ஓடினார்கள். பிறகு சில முக்கியமான ஸ்தானங்களுக்குத் தபால் வண்டிகளின்மூலமாய்க் கடிதம்கொண்டுபோக ஏற்

பாடுசெய்யப்பட்டது. அந்தத் தபால்வண்டியில் தபால் கொண்டு போகிறவகையை இதோ பாருங்கள். அந்தத் தபாலில் 1837-ம் வருஷம்வரையில் அவரவருடைய சொந்தமான கடிதங்களை அனுப்புவது மிகவும் அருமையாயிருந்தது. அந்தக் கடிதங்களுக்குக் கூலி ரொக்கமாகவே கொடுக்கப்பட்டுவந்தது. அதன் விகிதம் கடிதம் போகின்ற தூரத்துக்குத் தக்கபடி பலவிதமாயிருந்தது. இங்கிலாந்துக்கும் இத்தேசத்துக்கும் தபால் மாதத்துக்கு ஒருமுறை போய் வந்துகொண்டிருந்தது. இவ்வாறிருக்க 1854-ஸு தூரத்தைப்பற்றிய வேற்றுமை சிறிதுமில்லாமல் எவ்வளவு தூரமாஞலும் சமாசாரக் கடிதங்கள் எல்லாவற்றிற்கும் இத்தேசத்திற்குள் தபால் கூலி விகிதம் ஒரேவிதமாயிருக்கும்படியான புதியஏற்பாடு செய்யப்பட்டது. தபால் கட்டணம் ரொக்கமாய்ச் செலுத்துவது கூடாதென்று அதற்குப்பதில் தபால்முத்திரைகள் ஏற்படுத்தப்பட்டன; தபால் உத்தியோகசாலைகள் யாவும் தலைமையான ஒரு அதிகாரி (டைரெக்டர் ஜனரல்) யின் விசாரணையின் கீழ் அமைக்கப்பட்டன. ஆதலின் இப்பொழுது நடந்துவருகின்ற தபால் ஏற்பாடுகள் துவக்கிய வருஷமென்று 1854-ம் வருஷத்தை நாம்கொண்டாடவேண்டும். நாலாபக்கங்களிலும் இருப்புப்பாதை வண்டிகள் ஏற்பட்ட பிறகு, காலாள்மூலமாயும் தபால்வண்டிமூலமாயும் கடிதங்கள் அனுப்புவதில் காலதாமதமும் பொருட்செலவும் அதிகமாகின்றதெனக் கண்டு, அவ்வண்டியின்மூலமாகவே கடிதங்கள் கொண்டுபோய்ச் செலுத்தும்படியான ஏற்பாடுசெய்யப்பட்டது; நீராவிக்கப்பலின் வழியாய் த்வீபாந்தரத்துத் தபால்கள் வருகின்றன. அதனுல் இப்பொழுது தபால் நமக்கு எவ்வளவு தூரத்திலிருந்தாயினும் வெகு

சீக்கிரத்தில் வந்துசேருகின்றன. நெடுந்தூரத்திலுள்ளவர்களுடைய க்ஷேமத்தை நினைத்தவுடனே தெரிந்துகொள்ளவிரும்பினால் அதற்குத் தந்திதபால் சித்தமாயிருக்கின்றது. இருப்புப்பாதைவண்டி நிற்கும் அவ்வவ்விடங்களிலிருந்து அடுத்த ஊர்களுக்குக் கடிதம் கொண்டுபோய்க் கொடுப்பதுமாத்திரமே காலாள்களுடைய வேலை. இப்பொழுது இச்சென்னை ராஜதானியில் 942 தபால் உத்தியோக சாலைகளுண்டு; இவற்றில் கிராமங்களில் உள்ள சாலைகள் 144. தபால் கடிதங்கள் இருப்புப்பாதைவண்டியின்மூலமாய் 1815 மைலும், தபால்வண்டியின்மூலமாய் 98 மைலும், காலாள்மூலமாய் 6,377 மைலும், படவுகளின் மூலமாய் 15 மைலும், கடல்மார்க்கமாய் 3,064 மைலும் கொண்டுபோகப்படுகின்றன. தபால் உத்தியோகசாலைகளில் வந்துபோகிற சாமான்கள், கடிதங்களும் சமாசாரப் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் சிப்பங்களும் சேர்ந்து, மொத்தம் 1879-ஞுத்தில் 3,18,00,000 ஆயின. அதற்குமுன் வரையில் அரையணுவுக்குக் குறைந்த தபால்கூலி கிடைக்கவேகிடையாது; எவ்வளவு சொற்பமான சங்கதியாயினும் அரையணு செலுத்தியே அனுப்பவேண்டியதாயிருந்தது. பின்பு தீர்க்காலோசனைசெய்து சொற்பமாய் வெளிப்படையான சங்கதிகளுக்குக் காலணு கடிதங்கள் இருப்பது நலமெனத்தேர்ந்து, அப்படியே அதே வருஷத்தில் போஸ்டுகார்டு என்கிற காலணு கடிதத்துண்டுகள் ஏற்படுத்தப்பட்டன. பிறகு ரிப்ளைகார்டு என்கிற பிரதியுத்தர கடிதங்கள் ஏற்படுத்தலாயின. அதில் ஒருபாதி இங்கிருந்து சமாசாரமெழுதவும், மறுபாதி உத்தரமெழுதவும் அனுகூலமாகும்படி அமைத்திருப்பதால், மிகவும் அவசியமான சங்கதிகளில் கடிதம் பார்த்தவுடனே பிரதியுத்தரம் வேண்டுகின்றவர்களுக்கு அது மிகவும் சகாயமாய் அமைந்திருக்கின்றது. 1878-ஞுத்தில் தபால்மூலமாய் அனுப்பும் சாமான்களுக்கு உத்தரவாதம் செய்யும்படியான ஏற்பாடும் செய்யப்பட்டது; 1877-ஞுத்தில் நாம் சரக்குகளை யாருக்கு அனுப்புகிறோமோ அவரிடமிருந்து அதன்கிரயம் பெற்றுக்கொண்டுவந்து கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தத் தேதிமுதல் வேண்டியவிடங்களுக்கு ரொக்கமாய்ப் பணம் அனுப்புகின்ற (மணியார்டர்) முறையும், யாராவது மூலதனமாய்ப் பணம் கட்டினால் அதை வைத்து ரக்ஷித்து வட்டிகொடுக்கும் தபாலாபீசு தனரக்ஷகசாலையும், இவ்விந்துதேசத்துக்குரியதாய்ப் பணத்துக்குப் பிரதியாகக் கொடுக்கும் நோட்டுச்சீட்டுகளும் ஆகிய இவை ஒன்றின்பின் ஒன்றாய் ஸ்தாபிக்கப்பட்டன. 1884-ஞு இறுதியில் இந்தத் தபாலோடு தந்திதபாலையும் சேர்த்துவிடும்படியான முயற்சி துவக்கப்பட்டது. உடனே தந்திதபால் மூலமாய்ப் பணம் கொடுத்தனுப்பவும் ஆரம்பமாயிற்று. ஆதலால் இத்தன்மையான இன்னும் பல நன்மைகள் மேன்மேலும் விருத்தியாகுமென்று எதிர்பார்க்கிறோம்.

ஜப்பான் தேசத்தைப்பற்றிய சில விசேஷங்கள்.

இப்பொழுது இவ்வாசியாகண்டத்தில் நமது இந்துதேசம்போலவே வரவர நாகரிகத் தேர்ச்சிபெற்றுவருகின்ற நாடுகளுள் ஜப்பான் தேசமென்பதும் ஒன்றும். சீனதேசத்திற்குக் கிழக்கே சாந்த மகா சமுத்திரத்தில் அமைந்துள்ள சிறிதும் பெரிதுமான பல தீவுகளே ஜப்பான் தேசமென்பதாம். அத்தீவுகளுள் ஒன்றுகிய நிப்பன் என்பது பிரிட்டன் தீவைக்காட்டிலும் பெரியது; அத்தீவிலேதான் அத்தேசத்து ராஜதானியாகிய தோகியோ நகரம் அமைந்திருக்கின்றது. இந்நகரம் நமது கல்கத்தாவினும் மிகப் பெரியதாம். இத்தேசத்துப் பெரிய பல தீவுகளில் விசேஷமாக மலைகள் அடர்ந்திருக்கின்றனவாயினும், நிலம் மிகவும் செழிப்பானது. தானியம்முதலியவை மிகுதியாக விளைகின்றன; ஒன்றும் விளையாத பாழ்நிலமான தீவுகளும் சிலவுண்டு.

வேறு பல தேசங்களைப்போலாகாமல் ஜப்பான்தேசம் வெகுகாலத்திற்கு முந்தியே நாகரிகத்தில் தேர்ச்சிபெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. ஆயினும் அத்தேசத்தவர் வெகுகாலம் வரையிலே பிறதேசத்தவர்க்கு உட்புகுவதற்கு இடங்கொடாதிருந்ததனுல் அத்தேசத்தின் வரலாறுகள் விவரமாய் ஒருவர்க்கும் தெரியாமலேயிருந்தது. ஐரோப்பியருள் டச்சுக்காரர்மாத்திரமே வருஷத்தில் இரண்டு முறை அத்தேசத்திற்குப் போய்வரும்படி அனுமதிபெற்றிருந்தனர். இவ்வாறு பிறதேசத்து மனிதர்களோடும் அங்கங்கே விளையும் பொருள்களோடும் ஜப்பான்தேசத்தார்க்குப் பழக்கமில்லாமல் போனதனுலேதான் இவ்விஷயங்களில் அவர்கள் முழுமூடராயிருந்தனர். சில வருஷங்களுக்குமுன் அமெரிக்காதேசத்துக் கப்பலொன்று ஜப்பான்தேசத்துக்குச் சென்றபோது அக்கப்பலில் இருந்தவர்கள் அணிந்திருந்த உடைமுதலியவைகளையும், உடுப்புகளில் பூட்டியிருந்த பொத்தான்முதலியவைகளையும் கண்டு ஜப்பானியர்கள் மிகவும் விலையேறப்பெற்ற அற்புதமான பொருள்களாக நினைத்து விசேஷமாய்க் கொண்டாடி, அவற்றுள் தமக்கு ஒன்று கொடுக்கும்படி கெஞ்சிக்கேட்டார்கள். அவ்வாறே அவர்கள் கொடுக்க, அதைப் பெருங்கொடையாக எண்ணி அவர்களுக்கு அநேகவந்தனம்செய்து வீட்டுக்கு அதிவேகமாய் எடுத்துக்கொண்டோடி, தமது பந்துமித்திரர்களுக்குக் காட்டி மகிழ்ச்சியடைந்தார்கள். இவையாவும் பிறதேசங்களோடு பழக்கமில்லாமையால் விளைந்த குறைவுகளல்லவா? இப்பொழுது வரவரக் கல்வித்தேர்ச்சியாலும், நாகரிகம்பெற்ற நாட்டாருடைய பழக்கம் கொஞ்சங்கொஞ்சமாய் அதிகரிப்பதனுலும், இத்தன்மையான காரியங்களெல்லாம் தமது பேதைமையால் உண்டாகின்ற

வையேயல்லது வேறல்லவெனத் தெரிந்துகொண்டு பழையகாலத்து மூடத்தனமான துர்வழக்கங்களை விட்டுவிடத் தொடங்கினார்கள்.

ஜப்பான் தேசத்தவர்கள் ஆதியிலேயே ஒருவாறு நாகரிகம்பெற்றவர்களென்பதற்கு அறிகுறிகள் பலவுண்டு: அத்தேசத்துப் பிரபுக்களுடைய மாளிகைகளெல்லாம் பெரிய அரண்மனைகள்போலக் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு மாளிகையில் பதினாயிரம் பிரஜைகள் அடங்கியிருக்கலாமென்றால் அவற்றின் பரிமாணம் எத்தன்மையதாயிருக்குமோ நாமே யோசித்துத் தெரிந்துகொள்ளலாம். அம்மாளிகைகள் வெளிப்புறத்திலேமாத்திரம் அழகுள்ளனவாயிருக்கின்றனவென்பதில்லை; வெளிப்புறத்தினும் உட்புறத்தழகு மிகுதி; உட்புறத்தில் எங்கே பார்த்தாலும் கண்ணுக்கு விலக்ஷணமாயிருக்கும்; அங்கு அமைந்துள்ள சாமான்களெல்லாம் விலைபெற்றவையாயிருப்பதன்றியும், வெகு அழகாகவும் சீராகவும் அமைக்கப்பட்டுமிருக்கும். எளிய ஜனங்கள் வாழ்கின்ற குடிசைகள்கூடப் பார்க்க ரமணீயமாய் அழகுசெய்யப்பட்டிருக்கின்றன. அத்தேசத்தாரின் நாகரிகத்திற்கு அறிகுறி இது ஒன்றே போதாதா? அன்றியும் அவர்கள் மிக்க ஆசாரோபசாரமுள்ளவர்கள். மேற்கூறிய கப்பலிலிருந்த உத்தியோகஸ்தர்கள் சிலர் அங்கே அவ்விடத்து ஜனங்களைப் பார்க்க விரும்பி ஒரு நகரத்துக்குச் சென்று அந்நகரத்து அதிகாரியின் வீட்டுக்குப் போனபொழுது, அவ்வதிகாரி இவர்களை மிகுந்த மரியாதையுடன் வரவழைத்துப் பலவிதமாய் உபசாரஞ்செய்து வழிவிட்டு அனுப்பினார்.

சாதாரணமாய் அத்தேசத்தவர்கள் மழைக்காலங்களில் வெளிப்புறப்பட்டால், இத்தேசத்து நாட்டுக் குடிகள் தரிக்கின்ற சம்பங்குடைபோல ஒருவகைக் கோரையால்செய்த போர்வையொன்றை மேலே போர்த்துக்கொண்டே வெளியே கிளம்புவார்கள். பெரிய மனிதர்கள் பலர் தமது சட்டையின்மேல் மெழுக்கெண்ணெய்க் கடுதாசியாலாகிய போர்வைதரித்துக்கொண்டு வெளியேவருவார்கள். அப்போர்வைக்குள் குளிர் சிறிதும் நுழையாது. எக்காலத்திலும் விசிறியும் குடையுமில்லாமல் அவர்கள் வெளிப் புறப்படுவது மிகவும் அருமை.

ஜப்பான்தேசத்து ஸ்திரீகள் கறுப்புவஸ்திரமே தரிப்பது வழக்கம். அவர்கள் தலைமயிரையெல்லாம் சேர்த்து நடுத்தலையில் முடித்துக் கட்டிக்கொள்வார்கள். இத்தேசத்தவர்போல அவர்களது கண்ணும் கறுப்பு, தலைமயிரும் கறுப்பு; உதடு கோவைக்கனிபோலச் சிவந்திருக்கும். அவர்கள் கலியாணமாவதற்குமுன் பல்லுக்குப் பற்பொடிமுதலியவை தேய்த்துக் கறுப்புச்சாயமேற்றுவதில்லையாம்.

ஜப்பான் தேசத்தவர்கள் குடிப்பதில் பெருத்தவர்கள் அல்லரென்றாலும் பெருந்திண்டியுடையவர்கள்; புசிக்க உட்காந்து எழுந்திருப்பதென்றால் நாலைந்து மணி நேரங்கூடச் செல்வதுண்டு. நாலைந்து

மணியென்றால் அவ்வளவு நேரம் ஒரே நிலையாய்ப் புசிப்பதில்லை; நடுவில் அடிக்கடி எழுந்து சற்றுநேரம் சுருட்டுப்பிடித்துவிட்டு மறுபடியும் உட்கார்ந்து புசிக்க ஆரம்பிப்பார்கள்.

அத்தேசத்தவர்களெல்லாம் வெகுவாய்ப் புத்தமதஸ்தர்கள்; புத்ததேவாலயங்களும் அங்கே பலவுண்டு. அவற்றுள் பல மரத்தினால் கட்டப்பட்டு மேலே ஓடு மூடப்பட்டிருக்கும். அக்கோயில்களில் உச்சவம் அபிஷேகம் முதலியவைகளும் நடப்பதுண்டு.

ஜப்பான்தேசத்தில் பூர்வகாலத்திலே மறைவு என்பது ஒன்று கிடைக்கவே கிடையாது. கடைகாட்சிமுதலியவும் தெருவிலேதான்; வீடுகளிலோ, தெரிவிலே நின்றுபார்த்தால், வீட்டிற்குள் புசிப்பதோ, குளிப்பதோ, படிப்பதோ, தூங்குவதோ எல்லாம் நன்றாய்த் தெரியும். ஒருகாரியமும் மறைவாய்ச் செய்யப்படுவதில்லை. வீடுகளில் மேஜைநாற்காலி, பெட்டிபேழை, பாய்படுக்கைமுதலியவை விசேஷமாயிருப்பது அருமை. கனவான்களுடைய வீடுகளில் அருமையாய் இரண்டொன்று இருந்தால் அதை விசேஷமாய்க் கொண்டாடுவார்கள்.

துரைத்தன விஷயத்தைப்பற்றிப் பார்த்தாலோ ஆட்சிக்கு இர
ண்டு தலைவர்கள். அவர்களில் ஒருவர் சிறிதுகாலத்திற்குமுன்
வரையில் டைகூன் என்பவராயிருந்தார். அவரே லவுகிகவ
யங்கள் எல்லாவற்றையும் நிர்வகிப்பவர்; மற்றொருவர் [illegible]வர்
விஷயமான அரசனும்; அவருக்கு மிகா[illegible]டோவென்று பெய[illegible] அவர்
குடிகளுடைய கண்ணில் ஒருபோதும் தென்படுவதி[illegible]ப் பூசித்து
தெய்வத்தன்மை பொருந்தியவரென்று மிகவும் மே[illegible]டுகிறதில்லை;
வைத்து, அவர் காலைக்கூடத் தரையில் வைக்க[illegible] போகவேண்டுவது
எவ்விடத்திற்குப்போனாலும் தூக்கிக்கொண்டு [illegible]லே வாயைத் திற
தான். நாள்முழுதும் அவர் தம் சிங்காசனத்[illegible]மபோல உட்கார்ந்திருக்
வாமல் கைகால்களையும் அசைக்காமல் ப[illegible] [illegible]பாரானால் ஏதோ ஜனங்
கவேண்டும்; சிறிதளவு கைகால்களை [illegible] பிறகு [illegible]வதாக நினைத்துக்கொள்
களுக்குப் பெரிய தீங்கு சம்பவ[illegible] [illegible]ழ்படி வி[illegible]விதமாகவே வாழவே
வார்கள். ஒருவன் தன் காலம் [illegible] [illegible]ள் [illegible]வ கடித[illegible] எவ்வளவு இனிப்
ண்டுமென்றால் அவனது வா[illegible] [illegible]தரிந்தும[illegible] [illegible]ள்ளலாம்! அன்றி
பாயிருக்குமோ நாமே யே[illegible]த்துத் [illegible] தரித்திருக்கு[illegible] உடைன[illegible]ாள்
யும் தினந்தோறும் பக[illegible] அவ[illegible] [illegible]டு எரித்துவிடுவார்கள்[illegible]
லைப்பொழுதானவுடனே தீயிலி[illegible] உடுத்திக்கொள்ளவேண்டும். அவர்
காலையில் வேறு உ[illegible]டதான் [illegible]கிற தட்டுதாம்பாளம் முதலியவைக
உபயோகப்படுத்திக்காள்[illegible] முதனாள் உபயோகமானதை உடைத்து
ளும் இவ்வண்ணமேயா[illegible] ஒன்று கொள்ளவேண்டும். ஜப்பான்தே
விட்டு மறுநாள் புதித[illegible]ய் மேலே கூறியவண்ணம் நாகரிகத் தேர்ச்சி
சம் ஆதிதொடங்கி [illegible]ம்

பெற்றதாயிருந்தபோதிலும், இத்தன்மையான தீயவழக்கங்கள் பல வழங்கிவந்துகொண்டிருந்தன.

இப்பொழுது இவையாவும் வெகுவாக மாறிப்போயின. டைகூன் என்கிற அரசன் இக்காலத்தில் கிடையாது. மிகாடோ என்பவரே தலைவராயிருந்து தேசமெல்லாம் ஆளுகிறார். அவர் பதுமைபோல ஆசனத்தில் உட்காந்திருந்தகாலம் போயிற்று; ராஜாங்க வியாபாரங்களைக் கருத்துடனே செய்தவண்ணமா யிருக்கலாயிற்று. வைதிகாசிரியரா யேற்பட்டிருப்பவரும் குடிகளின் கண்களில் தென்படாமல் ஒளித்திருப்பதுபோயிற்று; சென்ற 1871-ஆு அக்டோபர்மீ யோகஹாமா, டோகியோ இவ்விரண்டு நகரங்களுக்கும் இடையே இருப்புப்பாதை போடத் துவக்கியபோது அவர்தாம் நேராகவே நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் ஏறிக்கொண்டு எல்லா ஜனங்களும் பார்க்கும்படி வெளியே புறப்பட்டு அவ்விடத்திற்கு வந்தார். அன்றியும் அங்கே கூடிய ஜனங்கள் அனைவரும் அக்காட்சியைப் பார்க்கும்படியாகவும் உத்தரவு அளித்து, அவர்களுக்கெல்லாம் பணியாரமும் வாங்கிக் கொடுக்கும்படியாகத் திட்டம்பண்ணினார். அன்றிராத்திரி பாணவேடிக்கை தீபாலங்காரம் முதலிய பல விநோதங்கள் நடந்தன. பிரஜைகளெல்லாரும் அவற்றைக்கண்டு மிகவும் மனமகிழ்ந்தார்கள். அரசன் உட்கா[illegible]ருக்குமிடமாயினும், அவன் அதிகாரவுடுப்பு மாட்டியிருக்குமிடமா[illegible]ம், அங்கே எவரா[illegible]னும் செல்லவேண்டுமென்றால் முழங்காலால் [illegible]ழ்ந்தாலன்றி மற்றப்படி செல்லக்கூடாதிருந்தகாலத்திற்கும் இக்காலத்[illegible]ற்கும் எவ்வளவு சிறந்த மாறுபாடுகள் உண்டாயிருக்கின்றன பார[illegible]ங்கள்! இப்பொழுது ஜப்பான்தேசத்தில் உண்டாகிய திருத்தங்களுள் [illegible]சிலவற்றை இதனடியில் கூறுகிறோம்.

முதலாவது, கு[illegible]ற்றவாளிகளைத் தண்டிக்கின்ற விஷயம். மேற்குத்தேசத்தவர்களு[illegible]சீகம் மிகுந்த தண்டனைகளை நன்றாய்ப்பார்த்துப் பழகிய[illegible]னைகளை[illegible]வானியர்கள் அதற்குமுன் தமது தேசத்தில் பிரஜைகளு[illegible]ர் சிறிதும்[illegible]பாக்கியத்தால் அடிக்கடி நடந்துகொண்டிருந்த, கொளு[illegible]மல் அவர்[illegible]வெட்டுவது முதலிய கொடிய சித்திரவதையான தண்ட[illegible]லாம் நீக்கிவிட்டனர். இப்பொழுது அவர்கள் செய்[illegible]வாமல் [illegible]விலக்[illegible]வண்டுமென்பது மாத்திரமேல் குற்றங்கள் [illegible]று தண்டனைக்[illegible]ள்ளா[illegible]ன்ற குற்றவாளிகளைச் சீர்ம். [illegible] அவ்வா[illegible]ண்டுமென்பதுமேயாம். குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்டவர்கள் படிப்பும், பலவகை [illegible]வர்த்த[illegible]த்தொழிலும், சித்திரமெழுதல், வர்ணம்வைத்தல்முதலிய வேலைகளும் கற்றுக்கொள்ளவும் ஏற்பாடுசெய்திருக்கின்றனர்.

இரண்டாவது, பணத்தைக் கையாளுகிற விஷயம். இவ்விஷயத்தில் அவர்கள் விருத்தியடைந்ததும் அவர்களுக்கும் பிறதேசத்

தவர்களுக்கும் உண்டான பழக்கங்களினுலேதான். முதலில் பணத்தை வழங்குகிற வகை இவ்வாறென்று ஐரோப்பியர் முதலானவர்கள் பலவிதமாக நேரில் தெரிவித்தும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜப்பானியர்களுடைய மூடத்தனத்தைக் கண்டு இதுதான் தருணமென்று பிறதேசத்தவர்கள் அவர்களை மோசஞ் செய்து அத்தேசத்துப் பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டுபோனபிறகு அவர்களுக்கு இவ்விஷயம் தெரியலாயிற்று. அதாவது, பிறதேசத்தார் ஜப்பான்தேசத்தில் முதலில் சென்றபொழுது அங்கே பொன்னும் வெள்ளியும் ஒரே விலையாய் எடைக்கு எடை சரியாக வழங்கிக்கொண்டிருக்கக் கண்டார்கள்; கண்டவுடனே அதுதான் தங்களுக்கு நல்ல தருணமென்று அத்தேசத்திலுள்ள பொன்களையெல்லாம் வெகு சீக்கிரத்தில் வெள்ளியைக் கொடுத்துவிட்டுக் கொள்ளையடித்துக் கொண்டுபோய்விட்டார்கள். பின்பு ஜப்பானியர்கள் ஐரோப்பியரோடு வர்த்தக வியாபாரங்கள் செய்துவருகிறபோது தாங்கள் மோசம்போன செய்தி அவர்களுக்குத் தெரியவந்தது. பிறகு அவர்களுடைய ஏற்பாட்டை விசாரித்து அதிலுள்ள சிறந்த நன்மைகளை[illegible] தெரிந்துகொண்டு தாமும் அவர்களைப்போலவே நடக்க ஆரம்பித்து, தமதுதேசத்திலே சொந்தமாய்த் தங்கசாலையொன்று ஏற்படுத்தி, பிறதேசங்களில் வழங்குவதற்குச் சரியாகவே பொன் வெள்ளிமுதலிய நாணயங்[illegible] அச்சிட்டுப் பிரசுரஞ்செய்யலானுர்கள். அன்றியும் தம[illegible], நாக[illegible]த்திற்குள் பணத்திற்குப் பதிலாக நோட்டு என்கிற காகிதத்[illegible]மெனகளையும் வழங்கத் துவக்கினுர்கள்.

அத்தேசத்து நாகரிக விருத்திக்[illegible] [illegible]றிகுறியான மற்றொன்று நாட்டுக்கு மிகவும் நன்மை பயக்[illegible]தமான சகாயமான தபால் ஏற்பாடாம். இந்தத் தபால்வியாப[illegible] அவர்கள் ஐரோப்பியரை அதிசயிக்காமற்போனுலும் அவர்கள[illegible]க்குச் சமானமான நிலையிலிருக்கின்றனர். ஜப்பான்தேசத்தில் துரைத்தனத்தார் தபால் ஏற்படுத்தத் துவக்கியது 1871-வருஷம். பிறகு ஐந்துவருஷத்திற்குள்ளே 30,000 மைல்தூரம் தபால் செல்லும்படி விருத்திசெய்யப்பட்டது. பெரிய பட்டணங்களில் சாதாரணமான கடிதங்களுக்குத் தபால் கூலி அரைப்பென்சு, அதாவது 4 பைசா; மற்ற விடங்களுக்கெல்லாம் 8 பைசா. இதற்குப் பாதிக்கூலிக்குப் போஸ்டுகார்டுகள் எங்கும் வழங்கிவருகின்றன. மணியார்டரும் ஏற்பட்டிருக்கின்றது. தபாலாபீசு தனரக்ஷகசாலையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வண்ணமே அனைவரும் வியக்கத்தக்க வகையாய்த் தந்தி தபால் விசேஷமாக விருத்திசெய்யப்பட்டிருக்கின்றது. ஆயினும் இருப்புப்பாதைவண்டிகள் அத்தனையாக விருத்திசெய்யப்படவில்லையென்பதுமாத்திரம் பெருங்குறையாயிருக்கின்றது.

இக்காலத்தில் ஜப்பான்தேசத்துச் சிறுவர்களுள் பலர் அங்கிலேயபாஷை கற்றறிந்தவராயிருக்கின்றனர். சில பிள்ளைகள் நாகரிகத்தில் மிகத்தேர்ந்திருப்பவர்களுடைய நீதி நல்லொழுக்கங்களையும் பாஷையையும் மிகத் திருத்தமாய்க் கற்றுக்கொள்ளும்படி இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஜப்பானியர்கள் இப்பொழுது இவ்வாறு நாலாபக்கங்களிலும் மேன்மேலும் அற்புதமானவகையாய்த் தேர்ச்சிபெற்றுவருகின்றனர். ஜாதி மதாசாரங்கள் அவர்களுள் கிடையாவாகையால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் மற்றத்தேசத்தவர்களைப்பார்க்கிலும் மிகவும் மேலான நிலைமைக்கு வருவார்களென்பது நிச்சயம்.

ஜப்பானியர்கள் கல்வியை உபேக்ஷைசெய்திருந்தார்களென்பது ஒரு காலத்திலுமில்லை; ஆயினும் இப்பொழுது சிலகாலமாய் எத்திறத்தோர்க்கும் கல்வி இன்றியமையாததென்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு மேன்மேலும் வித்தியாபிவிருத்திசெய்வதற்கு வேண்டியமுயற்சிகள் செய்துவருகின்றனர். 'வித்தியாபிவிருத்தி சபையார்' என்று சிலர் ஒரு சங்கமாய் ஏற்பட்டிருக்கின்றனர். பாடசாலையில் பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய பாடபுஸ்தகங்கள் பல பாஷைகளிலுமிருந்து மொழிபெயர்த்துச் சேர்ப்பதற்கு வேண்டிய வழிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சிறந்த புத்திநுட்பமுள்ள பிள்ளைகளாயிருந்தால் அத்தன்மையானவர்களுக்குத் துரைத்தனத்தாரே எல்லாச் செலவுகளும் கொடுத்து அன்னியபாஷைகள் கற்பிக்கும்படியாகவும், நாலந்து தேசங்களில் வழங்கும் பல சாஸ்திரங்கள் காவியங்கள் வைத்தியவஸயம் முதலியவைகள் கற்றுக்கொள்ளப் பிள்ளைகளை வெளித்தேசங்களுக்கு அனுப்பும்படியாகவும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இது இதவோடு ஸ்திரீகளுக்கு வித்தியாப்பியாசம் செய்விப்பதையும் அவர்கள் உபேக்ஷைசெய்யவில்லை; பெண்பிள்ளைகளுக்கு அங்கிலேயபாஷை, ஜப்பானியபாஷை இவை கற்பிக்கும்படி தோகியோ நகரத்தில் 1872-ம் வருஷத்திலே பாலிகாபாடசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு ஒன்றின்பின் ஒன்றாய்ப் பல பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அங்கே பாலிகாபாடசாலை முதலில் ஏற்பட்டது முக்கியமாய் மகாராணியாருடைய அபிமானத்தினாலேதான். மகாராணியார் அந்தப் பெண்களுடைய வித்தியாப்பியாசத்திற்காகத் தம் கைப்பொருளைக் கொடுத்து விசேஷமாய்ச் சகாயஞ்செய்தார்.

இவ்வாறு ஜப்பான்தேசத்தில் வித்தியாபிவிருத்திக்கு வேண்டிய வழிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றாலும், ஜப்பானியபாஷை அப்பியசிப்பதுமட்டும் மிகவும் கஷ்டசாத்தியமாயிருக்கின்றது. அந்தப் பாஷையில் எழுத்துக்களெல்லாம் சித்திர உருவங்களாகிவடிவத்தில் 3000த்துக்கு மேலிருக்கின்றன. இவைகள் யாவையும் நன்றாய்த்தெரிந்துகொண்டு அந்தப் பாஷையைச் செவ்வையாய் எழு

தப் படிக்கப் பழகுவதென்ருல் எவ்வளவு காலதாமதமாகும்; எவ்வளவு உழைக்கவேண்டும்? இக்காரணத்தினுலேயே இப்பொழுது அத்தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளில் படிப்பிக்க நன்ருய்த் தேர்ந்த உபாத்தியாயர் கிடைப்பதுகூடக் கடினமாயிருக்கின்றது. இது ஒரு பெருங்குறையென்பதை உணர்ந்து இப்பொழுது சிலர் அதைத்திருத்திச் சுலபமானவகையாய் வழங்கும்படி செய்வதற்காக ஒரு சங்கமாய்க்கூடி ஆலோசித்துவருகின்றனர். அவர்களுடைய நோக்கம் யாதெனின், இதுவரையில் வீணுன வருத்தத்திற்கு இடமாய் வழங்கிவந்த உபயோகமில்லாத அநேகமாயிரம் எழுத்துக்களுக்குப் பதிலாக அங்கிலேயபாஷையில் வழங்கிவருகிற ரோமன் எழுத்துக்களில் இருபத்திரண்டை உபயோகப்படுத்தி ஜப்பான்பாஷையைச் சுலபமாய் வழங்கும்படி செய்யவேண்டுமென்பதாம். இந்தமாறுதல் மிகவும் அவசியமாம். இதேவிதமாகத்தான் ஜர்மனிதேசத்தார் தாங்கள் நெடுங்காலமாக வழங்கிவந்த பழைய கோத்திக்கெழுத்தைத் தள்ளிவிட்டு அதற்குப்பிரதியாக ரோமரின் நெடுங்கணக்கைக் கையாடத்தொடங்கினுர்கள். [illegible]ஷையிலுள்ள எழுத்துக்களெல்லாம் இவ்வாறே சித்தி[illegible]ாகி நாற்பதினுயிரத்திற்குமேலிருக்கின்றன.

இப்பொழுது ஜப்பான்தேசத்தில் [illegible]நதேறிவருகின்ற அபிவிருத்திகளைப்பார்த்தால், அங்கே வெகு சீக்கிரத்திலேயே இருப்புப்பாதை வண்டிமுதலியனவும் விசேஷமாய் [illegible]ண்டாகி, நாகரிகம்பெற்ற நாடுகளுக்கெல்லாம் அது முதன்மை[illegible]ீனதாகுமெனத் தோன்றுகிறது.

ஒரு விநோதமான கதை.

முன்னெருகாலத்திலே வடதேசத்தில் மாயக்காரி ஒருத்தியிருந்தாள். அவளுக்கு இரண்டுபெண்கள்; அப்பெண்களுள் ஒருத்தி மிகவும் விகாரமான வடிவமும் கெட்டகுணங்களும் உடையவள். ஆயினும் அப்பெண் அவளுடைய சொந்தமகளானதனுல் மாயக்கிழவி அவளிடத்தில் அதிக அபிமானமுடையவளாகி, அவளுக்குக் குணபூஷணியெனப் பெயரிட்டிருந்தாள். மற்றெருமகள் சிறந்த ரூபலாவண்யமும் நற்குண நற்செய்கைகளும் உடையவளாயிருந்தாள். ஆயினும் அவள் சக்களத்திமகளானதுபற்றிக் கிழவி அச்சிறுமியினிடத்தில் பகைகொண்டு அவளுக்குக் குரூபியென்று பெயரிட்டாள். அம்மகளிடத்தில் மனதிலே பகைகொண்டிருந்தாளாயினும் அதை வெளிக்கு அத்தனையாகக் காட்டிக்கொள்ளாமலே மாயக்கிழவி அவ்விரண்டு பெண்களையும் வளர்த்துவந்தாள். இப்படி

யிருக்க ஒருநாள் அழகிற்சிறந்த பவழக்கொடியான குரூபியானவள் அற்புதமான ஆடையொன்றை அணிந்துகொண்டிருந்தாள். அதைக் கண்டு அவள்மேல் மிகப் பொறாமைகொண்ட குணபூஷணியானவள் உடனே தன் தாயினிடஞ்சென்று, அம்மா நீ எனக்கு அந்தப் பட்டாடையை இந்தக்ஷணம் வாங்கிக்கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் நான் இப்பொழுதே உன் எதிரில் உயிரை விட்டுவிடுவேன் என்று பிடிவாதஞ்செய்தாள்.

அதுகேட்டு அக்கிழவி, அம்மகளைச் சமாதானப்படுத்தி, குழந்தாய், நீ இதற்காக விசனப்படாதே; அந்தத் துஷ்டப்பெண்ணை நாம் நெடுநாளைக்கு முன்னமே கொலைசெய்திருக்கவேண்டும்; என்னவோ தப்பிப்போயிற்று. இன்று இராத்திரி அவள் நித்திரைசெய்துகொண்டிருக்கையில் தப்பாமல் நான் கொன்றுவிடுகிறேன்; பிறகு அவளுடைய பாக்கியமெல்லாம் உன்னுடையதுதான் என்றாள். அதுகேட்டுக் குணபூஷணி மிகவும் களிப்புற்றிருந்தாள். ஆயினும் இச்செய்தி குரூபிக்குத் [illegible]மற்போகவில்லை. தெய்வாதீனமாய் அவள் இவர்கள் பே[illegible]காண்டிருக்கிறசமயத்தில் அடுத்த அறைக்குள் மறைவாக நின்று[illegible] ந[illegible]ந்ததனால், இவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் அவளுக்[illegible]ளாய்த் தெரிந்துபோயிற்று. இல்லாவிட்டால் அவள் அன்று [illegible]ராத்திரி உயிரிழந்துபோயிருக்கவேண்டுவதுதான். அதுகேட்டு [illegible]ச்சிறுமி மிகவும் விசனமடைந்து அன்றைப்பகலெல்லாம் வீட்[illegible]டு வெளிப்புறப்படாமல் உள்ளேயே உட்காந்திருந்தாள். அ[illegible]து யாவரும் படுக்கிற தருணமானவுடனே மாயக்கிழவியானவள் எங்கேயோ ஒருமூலையில் உட்காந்திருந்த குரூபியை அழைத்துப் பலவந்தப்படுத்தி அவள் வழக்கமாய்ப் படுக்கிறவிடத்திலேயே படுத்துக்கொள்ளும்படி செய்தாள். ஆயினும் "அகதிக்கு ஆகாயமே துணை" என்கிறார்களல்லவா? அச்செல்வச் சிறுமகளுடைய தருமபுத்தியே அவளைத் தலைகாத்தது. தெய்வகடாக்ஷத்தால் அன்றையதினம் குணபூஷணி முன்னமே படுத்துத் தூங்கிப்போயினாள். அதுதெரிந்து குரூபி தான் வழக்கமாய்ப் படுத்துக்கொள்ளுமிடத்தில் படுத்து நித்திரைசெய்பவள்போலிருந்து யாவரும் கண்ணயர்ந்தவுடனே தன்னிடத்தில் குணபூஷணியைத் தள்ளிவிட்டுத் தான் எழுந்துபோய் ஒருமூலையாய்ச் சுவர்ப்புறத்திலே பதுங்கிக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க அர்த்தராத்திரியில் கிழவி விழித்துக்கொண்டு தான் நினைத்தகாரியத்தை நிறைவேற்றக்கருதி, உடனே எழுந்து, கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு பெண் படுத்திருக்கும் இடந்தேடி வந்து, அங்கே படுத்திருப்பவளைக் கையினால் தடவிப்பார்த்து, அவளே தன் சக்களத்திமகளென்றெண்ணிக் கத்தியை ஓங்கிக் கழுத்தை வெட்டிவிட்டாள். இதைப் பார்த்திருந்த குரூபி, கிழவி அப்பு

றம் செல்லுமளவும் சிறிதும் சந்தடிசெய்யாமல் அங்கேயே பதுங்கிக் கொண்டிருந்தாள்.

இவர்களுடைய வீட்டிற்கு ஐந்தாறுவீடு அப்பால் தருமசீலன் என்று ஒருவன் இருந்தான். அவன் இந்தக் குரூபியைப்போலவே ஈவிரக்கம் முதலிய நல்ல குணங்களுக்கு நாற்றங்காலானவன். அவனும் குரூபியும் பிராணசிநேகிதர்கள். இவ்விருவரும் தமது சுக துக்கங்களைச் சமமாகவே அனுபவித்துவந்தார்கள். குரூபியை அவளது மாற்றாந்தாய் படுத்திவந்த பாடெல்லாம் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதற்கேற்ற பரிகாரமென்னவென்று அவனும் தகுந்த வழி தேடிக்கொண்டேயிருந்தான். இவ்வளவோடுகூட இவ்விருவரும் தாங்கள் தம்பதிகளாகி இந்த நேசமுறை தவறாமலே இல்வாழ்க்கை செய்யவேண்டுமென்றும் சங்கேதம்செய்துகொண்டிருந்தார்கள். இவ்வாறிருக்கும் சமயத்திலேதான் மேற்கூறிய புதுமை நடந்தது.

பெண்கழுத்தை வெட்டிவிட்டுக் கிழவி அப்புறம் சென்றவுடனே குரூபி மெல்லக் காலடியோசை கேளா[illegible] வீட்டைவிட்டு வெளியேவந்து தருமசீலன் வீட்டுக்குச் செ[illegible]வனையெழுப்பி நடந்த வரலாறுகளையெல்லாம் அவனுடன் [illegible] இனி நாம் இவ்விடத்திலிருக்கக்கூடாது; பொழுதுவி[illegible]னே ந[illegible] வர்த்தமானம் இப்படியென்று அவளுக்குத் தெ[illegible]ல் தக்ஷணமே நாம் உயிரிழந்தவர்களாவோம். இனி எங்கேயா[illegible] ஓடிப்போய்த்தான் உயிர்தப்பித்துக்கொள்ளவேண்டும். அதைப்[illegible]றி உன் அபிப்பிராயமென்ன என்றாள். அதுகேட்டுத் தருமசீலன், நீ சொல்வதெல்லாம் சரியே; ஆயினும் நாம் ஓடிப்போனது தெரிந்து அம்மாயக்கிழவி நம்மைத் துரத்த ஆரம்பித்தால், அவள்கையில் அகப்படாமல் தப்பித்துக் கொள்ள நம்மால் ஆகுமோ? ஆதலின் நீ மெல்ல அவளுடைய மாயப் பிரம்பைமாத்திரம் தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்துவிடு; அதன் பிறகு அவளுடைய வீரியம் நம்மிடத்தில் ஓங்காது; ஓடிப்போகலாமென்றான்.

அதைக் கேட்டுக் குரூபி சரிதானென்று அங்கீகரித்து உடனே வீட்டுக்குச் சென்று கிழவிக்குத் தெரியாமல் மந்திரப்பிரம்பையெடுத்துக்கொண்டு வெட்டுண்டுகிடந்த தலையையும் தூக்கிக்கொண்டு வந்தாள். வரும்போது அந்தத் தலையிலிருந்து மெத்தைமேல் படுத்திருந்தவிடத்தில் ஒருதுளி உதிரமும், மெத்தையின்கீழ்க் கூடத்தில் ஒருதுளி உதிரமும், வாயிற்படியில் ஒருதுளி உதிரமும் ஆக மூன்று துளி உதிரங்கள் சிந்தின. பிரம்பையெடுத்துக்கொண்டு குரூபி தன் தோழனிடம் சென்று அவனோடுகூடவே அவ்வூரைவிட்டு ஓடிப்போயினாள்.

இவ்வாறிருக்கப் பொழுதுவிடிந்தது. மாயக்கிழவி வெகு சந்தோஷத்துடனே எழுந்து நடந்தசெய்தியைத் தன் மகளுக்குத் தெரிவித்து, அவள் ஆசைப்பட்ட பட்டாடையை அவளுக்கு உடுத்தி

மனங்களிக்கவேண்டுமென்று விரும்பி அவளைக்கூவி அழைத்தாள்.
எத்தனைதரம் கூவியும் ஏனென்று எதிர்மொழி சொல்வார் ஒருவரு
மில்லை. மகள் இறந்து இரண்டுநாளாயிற்றே; ஏனென்றுசொல்லியார்
ஓடிவருவார்கள்! முதலில் அந்தக் கிழவி, 'குழந்தாய், எங்கேயிருக்
கிறாய்' என்று கூவியபொழுது, 'இதோ கூடத்தில்' என்று அங்கி
ருந்த உதிரத்துளி மறுமொழி கூறிற்று. அங்கேபோய்ப் பார்த்தால்
ஒருவருமில்லை; 'நீ எங்கேயிருக்கிறாய்' என்று மறுபடியும் இரண்டாந்
தரம் கூவியழைக்க, 'இதோ வாயிற்படியில்' என்று அங்கிருந்த மற்
றொரு துளி கூறியது. அதைக்கேட்டுக் கிழவி அங்கே ஓடினாள்; அவ்
விடத்தில் மகள் உட்காந்திருக்கிறாளா என்ன? அங்கேயும் காணமல்
மறுபடியும் உரக்கக் கூவினாள். அப்பொழுது 'இதோ மெத்தை
மேல் படுத்திருக்கிறேன்' என்று கூச்சல் கேட்டது. அக்கூச்சல் செவி
ப்பட்டவுடனே கிழவி அ[illegible]கிருந்து ஓடிப்போய்ப் படுக்கையிலே
பார்த்தாள். அங்கிருந்தக[illegible]யைக் காணவே அவளுக்கு உண்டான
துக்கத்தை என்னென்று[illegible]லலாம்! அங்கே வெட்டுண்டுகிடப்பது
யாரென்று உற்றுப்பார்[illegible] ஐயோ! தன் கையால் வெட்டுண்டது
தன் சொந்தமகள் எ[illegible]ழுதுதான் அவளுக்குத் தெரிய
வந்தது. தலை[illegible]த் தேடி[illegible]ள்; அதுவும் காணப்படவில்லை.
உடனே துக்கப்படாமல் ம[illegible] தேற்றிக்கொண்டு சற்று நிதானி
த்து யோசித்து, நடந்தவ[illegible] இப்படியெனத் தெரிந்துகொண்டு
கண்களில் நெருப்புப்பொறி [illegible]றக்க உதடு துடிக்க உடல் பதைக்க
மனந்தவிக்க மிக்க சினங்கொண்டாள்.

தக்ஷணமே அம்மாயக்காரி அப்படியே வீட்டின் சாளரத்தைப்
பிளந்துகொண்டு வெளியேசென்று நாற்புறமும் சுற்றிப்பார்த்து,
நெடுந்தூரத்திலே தருமசீலனோடுகூடத் தன் சக்களத்தி மகள் ஓடுவ
தைக் கண்ணுற்றாள். கண்டவுடனே மாயக்காரி, இவ்வாறு பயந்
தோடுவதில் சிறிதும் பயனில்லை; இன்னும் இதைப்போல இரட்டத்
தனை தூரத்திலிருந்தாலும் நீங்கள் என் கையில் அகப்படாமல் தப்
பித்துக்கொண்டு ஓடமாட்டீர்கள் என்று சொல்லித் தன் மந்திரப்
பாதரக்ஷைகளையெடுத்துக் காலில் மாட்டிக்கொண்டாள்; உடனே
நிமிஷத்திற்கு நாலுநாழிகை வழியாக நடந்து ஒருமணிநேரத்தில்
அவர்கள் அருகே போய்ச்சேர்ந்தாள். அவள் சிறிதுதூரத்திற்கு அப்
பால் வரும்பொழுதே அவளைக்கண்டு குரூபி, தன் கையிலிருந்த மந்
திர தண்டத்தின் மகிமையால் தன் நண்பனை ஒரு பெரிய தடாகமாக
மாற்றி, தான் அதில் ஒரு அழகிய அன்னப்பறவையாகியிருந்தாள்.
கிழவி அத்தடாகத்தின் கரைபோய்ச்சேர்ந்து, தன் பகைவர்களை
இவ்வாறு மாறியிருக்கிறார்களெனத் தெரிந்துகொண்டாளாயினும்,
மந்திரதண்டம் கையிலில்லாமையால் அவர்களை யாதொன்றும் செய்
யமுடியாமல், தன்னிடம் வரும்படி அன்னப்பறவைக்குப் பலவித
மாக ஆசைகாட்டிக்கொண்டு பொழுதுபோமளவும் அதன் கரையி

லேயே காத்துக்கொண்டுநின்ருள். எந்நேரம் காத்திருந்தும் அது அவளருகில் வரவேயில்லை; பொழுதும்போய்விடவே இனிமேல் காத்திருப்பதில் பயனில்லையெனத் தெரிந்து அவள் வீட்டுக்குப் போய்விட்டாள்.

அவள் அப்புறம் போனவுடனே அச்சிறுமி இயல்பான உருவம் பெற்றுத் தருமசீலனையும் அழைத்துக்கொண்டு அன்றிரவெல்லாம் வழி நடந்து சென்ருள். பொழுதுவிடிந்தவுடனே மாயக்கிழவி வந்து விடுவாளெனத்தெரிந்து குரூபி தன் தோழனை நடுக்காட்டில் குடியிருந்து விநோதமாக வீணைவாசித்துக்கொண்டிருக்கின்ற வேடனுக வும், அவன் குடிசைக்கு எதிரே எவரும் உட்புகக்கூடாத பெரிய முட்புதரின் மத்தியில் தான் ஒரு மல்லிகைக் கொடியாகவும் மாறியிருக்கும்படி செய்துகொண்டாள். அப்படியே தருமசீலன் அங்கிருந்து விநோதமாக வீணைவாசிக்கலாஞன். உதயமாகிச் சிறிது நேரத்துக்கெல்லாம் மாயக்கிழவி அவ்விடம் வந்துசேர்ந்தாள். சேர்ந்தவுடனே அங்கிருப்பது இன்னுரெனத் தெரிந்துகொண்டு வீணைவாசித்துக்கொண்டிருந்த வேடனைநோக்கி, [illegible]ப்பனே, குழந்தாய், உன்னுடைய மல்லிகைமலர்களில் சில நா[illegible] பறித்துக்கொள்ளலாமா என்ருள். அதுகேட்டு அவன், சுகமாய்ப் பறித்துக்கொள்ளலாம்; நானும் வீணைவாசித்துக்கொண்டு உயர் பின்னே வருகிறேன் என்று சொல்ல, அவள் தான் கொண்டிருந்த ஆக்கிரகத்தினுல் அது முட்புதர் என்றுகூடப் பாராமல் அதனுள் புகுந்தாள். பின்னே தருமசீலன் மிகவும் இனிமையாய்ப் பாடிக்கொண்டே சென்ருன். அவன் பாடிய பாட்டினுல் மயக்கங்கொண்டு மாயக்காரி அப்புதரிலேயே உடம்புதெரியாமல் பலவிதமாய்க் கூத்தாடத் தொடங்கினுள். அப்புதரிலே விஷத்தன்மையுள்ள முட்செடிகள் பல உண்டு. மாயக்கிழவி ஆநந்தபரவசமாய்க் கூத்தாடி அடிக்கடி முள்ளின்மேல் விழுந்து தேகம்முழுதும் காயப்பட்டு, விஷந் தலைக்கேறி மாண்டுபோயினுள்.

இவ்வாறு தாம் செய்த உபாயத்தினுல் தாங்கள் அந்தக் கொடிய கிழவியின் கையில் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பிப்பிழைத்தது கண்டு தருமசீலன் மிகுந்த சந்தோஷமடைந்து தன் தோழியை நோக்கி, என் கண்ணே, இனி நமக்குக் குறை யாதொன்றுமில்லை; சுதேசஞ்சென்று நம் மநோரதத்தை நிறைவேற்றிக்கொள்வோம் வாவென, அப்படியே அவ்விருவரும் அங்கிருந்து புறப்பட்டுச்சென்ருர்கள். தம் நகரத்துக்கு அருகே சென்றவுடனே தருமசீலன் அவ்வழகியைக் கண்டு, பெண்கள் திலகமே, நீ இவ்விடத்திலேயேயிரு; நான் முன்னதாகச் சென்று விவாகஞ்செய்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டுவந்து உன்னை அழைத்துக்கொண்டுபோகிறேனென்ன, குரூபியும், அப்படியே ஆகட்டும், நீ போய் வருமளவும் இவ்விடத்திலேயே நான் ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் ஒரு கல்

லாகமாறியிருக்கிறேன்; சீக்கிரம் போய்வரவேண்டுமென்று சொல்லி அப்படியே யிருந்தாள்.

தருமசீலன் அவளை அங்கேயே விட்டுவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான். அவ்வூரிலிருந்த ஒரு யோகி தன் மகளை இவனுக்குக் கலியாணஞ்செய்விக்கவேண்டுமெனக் கருதி இவன் தந்தையோடு அவ்வாறே ஏற்பாடு செய்திருந்தான். தருமசீலன் வீடுவந்துசேர்ந்ததும் அந்த யோகி இவனைக்கண்டு இவன் கருத்திலிருப்பதைத்தெரிந்துகொண்டு, ஓகோ மோசம்போனேமே, இவன் வேறிடத்தில் ஆசைவைத்திருக்கிறானே என்று யோசித்து, இப்பொழுது இவன் யாரைமனதில் எண்ணிக்கொண்டிருக்கிறானே அவளை இனிக் கண்ணெதிரில் கண்டாலல்லது அவள் நினைவு இவனுக்கு வரக்கூடாதென்று சபித்துவிட்டான். உடனே குரூபியைத் தருமசீலன் முற்றும் மறந்துபோயினான். பிறகு யோகியின் மகளை அவனுக்குக் கலியாணஞ்செய்விப்பதற்கு வேண்டியமுயற்சிகள் நடந்துகொண்டிருந்தன.

இது இப்படியிருக்கக் [illegible]பியின் கதியென்னவாயிற்றென்று பார்ப்போம். தருமசீலன் தன்னை விட்டுப்போன நிமிஷமுதல் அவன் எப்பொழுது[illegible]து தன்னை அழைத்துக்கொண்டுபோவானென்று அவன் வரன்வயே அ[illegible] வழிபார்த்துக்கொண்டிருந்தாள். எத்தனைநாள் காத்திருந்தும் அவ[illegible]து சேரவில்லை. அதனால் அவள் மிகவும் துயரமுற்று, நாம் ஒரு புஷ்பமாயிருந்தால் அப்பொழுதாவது எவராயினும் நம்மைக் கொய்து வீட்டுக்குக்கொண்டுபோகமாட்டார்களா என்றெண்ணி ஒரு ரோஜாபுஷ்பமாக மாறியிருந்தாள்.

அப்படியிருக்க இரண்டொரு நாளைக்குப்பிறகு அந்தக் கொல்லைமேட்டில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த ஒரு இடையன் வெகு அழகாய்ப் பூத்திருக்கும் இந்தப் பூவைக்கண்டு மிகவும் சந்தோஷமடைந்து அதைக் கொய்து வீட்டிற்குக் கொண்டுபோய்த் தன் பெட்டியில் வைத்துக்கொண்டான். அன்றுமுதல் அவன் வீட்டில் எல்லாச் செல்வங்களும் செழித்தோங்கின; அவனுக்குத் தெரியாத அற்புதமான காரியங்களும் பல உண்டாகத்தலைப்பட்டன: காலையில் அவன் படுக்கையினின்று எழுந்திருக்கும்பொழுதே வீட்டில் செய்யவேண்டிய வேலைகள்யாவும் செய்து சித்தமாயிருந்தன; வீடுமுழுதும் நன்றாய்த்துடைத்துச் சுத்திசெய்யப்பட்டிருந்தது; இனிய பல பண்டங்களோடு போஜனமும் சித்தமாயிருந்தது. அதுகண்டு அவன் இதென்னவென்று மிகவும் ஆச்சரியங்கொண்டு காலைப்போசனம் செய்துவிட்டு, வேலையின் அவசரத்தினால் அதைப்பற்றி மற்றொன்றும் ஆலோசியாமலே வெளியே போய்விட்டான். பகலில் வீட்டுக்கு வரும்பொழுதும் அவ்வண்ணமே சாப்பாடுமுதலியன சித்தமாய் எடுத்துவைத்திருந்தன. அதைக் காணவே அவனுக்கு உண்டான வியப்பு இவ்வளவு அவ்வளவல்ல; இப்படி நம்மிடத்தில் அன்புவைத்து உதவிபுரிவது யாரோ பார்க்கவேண்டுமென்று வீடு

முழுதும் சுற்றித் தேடினான்; ஒருவரும் கண்ணுக்குத்தென்படவில்லை. பசியின் மிகுதியால் அதிகமாய்த் தேடாமல் உடனே புசித்துவிட்டு வேலைக்குப் போய்விட்டான். இவ்வாறே இரண்டொருநாள் நடந்துவந்தது. கடைசியில் ஒருநாள் அவன் இதென்ன மாயமோ தெரியவில்லையே என்று அடுத்த வீட்டிலிருந்த பண்டிதரிடம்சென்று அவருக்குச் செய்தி தெரிவித்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்க, அவர் இது ஏதோ ஒரு மாயையின் செய்கை போலக் காண்கிறது; நீ நாளையதினம் அதிகாலையில் எழுந்து வீட்டில் எங்கேயாவது சந்தடி உண்டாகிறதாவென்று ஊற்றமாய்ப் பார்த்துக்கொண்டிரு; ஏதேனும் சிறிதளவு சந்தடி உண்டானால் அவ்விடத்தில் உடனே ஒரு வெள்ளைவஸ்திரத்தைப்போட்டு மூடிவிடு; அந்த மாயை உடனே நீங்கிப்போகுமென்றார்.

இடையன் அப்படியே ஆகட்டுமென்று வீட்டுக்கு வந்தான். மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து அவன் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கையில் உதயகாலத்தில், அவனுடைய பெட்டி தானே திறந்த ஓசை கேட்டது. கேட்டவுடனே அவன் அதினிடஞ்சென்று தான் வைத்திருந்த வஸ்திரத்தினால் அதைமூட, அந்த மாயை நீங்கி அழகிய மகள் ஒருத்தி எதிரே நின்றாள். அவளைக்கண்டு இடையன் மிக்க வியப்புற்று, நீயார் உன் செய்தியென்னவென்று கேட்க, அவள், நானே ஒரு மாயையினால் மலர்போல மாறி உன் பெட்டிக்குள் வசித்திருக்கிறேன். உன்னுடைய சவுக்கியத்திற்காக நான் நாள்தோறும் உன் வீட்டைச் சுத்திசெய்து சமையல் முதலியனவும் சித்தப்படுத்திவருகிறேன் என்று, தன் மற்றக் கதைகளையும் ஆதியோடந்தமாக அவனுக்குத் தெரிவித்தாள். அவனும் அவளுடைய வாவினால் தனக்குண்டான பாக்கியங்களைப் பார்த்து மிகவும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தவனாய், அவளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென விருப்பங்கொண்டான். ஆயினும் அவள் அதற்கு உடன்படாமல், முன்னமே நான் இன்னானை எனக்குக் கணவனாக மனதில் வரித்துவிட்டிருக்கிறேன்; இனி மற்றெவனையும் மனதினாலும் சிந்திக்கமாட்டேன்; உனக்கிஷ்டமானால் உன்மகள்போலிருந்து வீட்டுவேலைகளைச் செய்துகொண்டுவருகிறேன் என்றாள். அதுகேட்டு இடையன் அவளது கற்புநிலைமைக்கு மிகவும் வியந்து, தான் தெரியாமல் சொன்ன பேச்சுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அன்றுமுதல் அவளை மகள்போலவே பரிபாலித்துவந்தான்.

இவ்வாறிருக்கையில் தருமசீலனுக்குக் கலியாணஞ்செய்யவேண்டிய தினம் வந்துவிட்டது. அதற்கு முதனாள் மணமகனுக்கு மங்களஸ்நானம் முதலியவை செய்வித்துப் பண்டிகை கொண்டாடுகின்ற வழக்கமல்லவா? அவ்வண்ணமே இவனுக்குச் செய்விக்கும்போது ஊரிலுள்ள பெண்களையெல்லாம் வரவழைத்தார்கள். அதுகேட்டுக் குரூபி மிகவும் விசனமுற்று வருந்திக்கொண்டிருந்தாள். அப்

பொழுது அண்டைவீட்டுக்காரி ஒருத்தி வந்து, வீணாய் விசனப்ப டாதே; கலியாணவீட்டுக்குப் போய்வருவோம் வாஎன்று சொல்லி அவளையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டுபோனாள்.

அங்கே வந்திருந்த பெண்களெல்லாம் பற்பல பாட்டுக்கள்பாட, இந்தக் குரூபியையும் பாடும்படி இரண்டொருவர் நிர்ப்பந்தப்படுத் தினார்கள். அதைத் தடுக்கக்கூடாமல் அவளும் சிறிது பாடும்படி நேரிட்டது. அப்படியே அவள் இனியமொழியாய்ப் பாடிக்கொண் டிருக்கையில், அவள் குரலைக்கேட்டுத் தருமசீலன் எழுந்து அவளை உற்றுப்பார்த்து, இதோ என் அருமை மனையாட்டி! இதோ என் பிரா ணநாயகி!! இவ்வழகியை நான் இத்தனைநாளாக மறந்து பெரும் பழிக்கு ஆளானேன் என்று சொல்லி அவளிடம்சென்று, இத்தனை நாள் நான் செய்த பெரும் பிழையைப் பொறுத்துக்கொள்ளவேண்டு மென்று வேண்டிக்கொண்டான். பின்பு இவ்விருவர்களுக்குமே வெகு விநோதமாக விவாகமகோற்சவம் நடந்தேறியது. அன்றுமுதல் அவர் கள் இருவரும் இல்வாழ்க்கையின் பின்னோர்க்கு ஓர் நல்ல நிதர்சன மாக நடந்துகொண்டு சுகமாக நெடுநாள் வாழ்ந்திருந்தார்கள்.

சமாசாரம்

சுலபமாய்ச் சாந்துபூசுதல். — இக்காலத்தில் சிலநாளைக்குமுன் வரை நல்ல சாந்து அகப்படாமல் சிற்பிகள் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தார்கள். வீடுமுதலிய கட்டவேண்டுமானால் நல்ல சாந்து வேண்டியது அவசியம். புராதனமான கட்டடங்களிலுள்ள சாந்து வேலைகளைப் பார்த்தால் இன்றுதான் பூசப்பட்டதோவென்று சந் தேகிக்கும்படி பளபளவென்று வெண்ணெய்க்கட்டிபோல வெகு அழகாயிருக்கின்றன; முற்காலங்களில் சுண்ணச்சாந்தினாலே தீட்டிய சித்திரப்படங்கள் அங்கம்குலையாமல் அப்படியே அநேகம்காணப்படு கின்றன. இப்பொழுது இங்கிலாந்தில் கார்லைல்நகரத்திற்கருகே ஜோ ஸப் ராபின்ஸன் என்னும் சிற்பியினால் புதிதாக ஓர்வகைச்சாந்து செய்யப்பட்டிருக்கிறது. அவர் சாந்துகூட்டும் வேலையில் அறுபது வருஷகாலமாய் அமர்ந்து வேலைபார்த்துவருகிறார். இந்தச்சாந்து ஒருதரம் பூசியானதும் இரண்டாம் வெள்ளை பூசச் சற்றும் காத் திராதபடி உலர்ந்துவிடுமாதலால்; வெகு சீக்கிரத்தில் மூன்று வெள் ளையையும் வைத்துவிடலாம். அன்றியும் இது மற்றச் சாந்துகளைப் போல அதுங்காமலும், நெகிழ்ந்து வழிந்து நாலண்டையிலும் பரவா மலும், எவ்வளவு ஜலம்பட்டாலும் சிறிதுங் கசிவுகொடாமலும், எளி தில் பழுதுபடாமலும் இருக்கும்; அன்றியும் கற்பலகையைப் போல நன்றாய் உறுதியாயுமிருக்கும். வீடுகளில் தீப்பிடித்தாலும் அதிகமாகத் தீப்பற்றாமல் அது தடுக்க வல்லதென்றுங்காண்கிறது.

S. P. C. K. Press, Vepery, Madras. 1886.